தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஆடி 1993



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE ; FRANCE



## தமிழீழத்தில் ஊட்டச்சத்து குறைவால் பாதிப்புறும் குழந்தைகள்

## சுதந்திரப் பிரகடனம்: எரித்திரியா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஏர்பிடித்து
ஏற்றக் கொடிபிடித்து
இங்குள்ள
ஊர்வாய்க்கு எல்லாம்
உணவுளித்து விட்ட பின்பே
நின்வாய்க்கு உணவளிக்கும்
நிலமகனே!
மணமக்கள் வாழுகின்ற, மண்
பகைவன் காலடியில்,
எந்நாளும் போகாது இருக்கும்.
இது உறுதி.
பெட்டிக்குள் என்ன புட்டா?
பழஞ்சோறா?
முட்டுப்பட்டோருக்கு
முழு உணவு ஏதய்யா?
எருதுகளின் நிழலில்
இளைப்பாறும் பெருமனிதா!
விருதுனக்குத் தருவதற்கு
விடியும் ஒரு பொழுது.

- புதுவை இரத்தினதுரை -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு

ஆடி 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

# தமிழ்த் தேசிய விடுதலையை பின்நோக்கி நகர்த்த முடியாது

"தமிழ்த் தேசியம் நிலைபெற்றுவிட்டது. அது முன்னேறியே செல்லும். வரலாறு மீண்டும் அரங்கேறலாம். ஆனால் அது பின்நோக்கி நகர்வதில்லை." ஆஸ்திரிய தலைநகரான வியன்னாவில் நடைபெற்ற உலக மனித உரிமை மகாநாட்டில், பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். புதிய அரசுக்குரிய பல்வேறு அம்சங்களுடன் தமிழீழத் தேசம், எழுந்து வளர்ந்து வருகின்றது. இந்த உண்மையை மறுதலிக்க, அந்த நிகழ்வுப் போக்கைத் தடுத்து நிறுத்த முயல்வோர், வரலாற்றினை விதிகளுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். எனவே, அவர்களினது முயற்சி தோல்வியைத் தழுவும் என்பது நிச்சயம். இத்தகு தடைகளை வரலாறே தன்னியக்கமாக அகற்றி வருகின்றது.

சிறிலங்காவில் சிங்கள இனவாதம், தலைமையிழந்து பலவீனப்பட்டு நிற்கிறது. இனவாதம் உலக வழக்கிலிருந்து அகற்றப்பட வேண்டிய ஒன்றாகவே கருதப்படுகின்றது. சிங்கள இனவாதம் எத்தனையோ படிப்பினைகளைக், கற்றுக்கொண்ட போதிலும், தனது பிடியை விடுவதாக இல்லை. புதிய ஜனாதிபதியும் இத்தகைய ஆளுகைக்குள்ளேயே அகப்பட்டு நிற்கிறார். இதனால் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை சமாதான ரீதியாகத் தீர்க்கப்படுவது பின்போடப்படுகின்றது.

அண்மையில், சிறிலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் யுத்தக்கைதிகள் பரிமாற்றம் தொடர்பாகக் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம், சிங்கள இனவாதம் நெருக்கடிக்கு உள்ளாகின்றது என்பதையும், தனது இறுக்கங்களைத் தளர்த்தி நியாயத்தை அங்கீகரிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றது என்பதையும் நிரூபிப்பதாக உள்ளது. உள்நாட்டுப் போரில் ஈடுபடும் அரசாங்கத்திற்கும், எதிர்த்தரப்பினருக்குமான ஒப்பந்தம் என்பதனை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொண்டமைக்கு மேலாக, இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் (Bilateral) தரத்தினை எட்டியுள்ளது என்பதே உண்மையாகும். யுத்தக்கைதிகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திவந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுக்கு விடுதலைப்புலிகள் இராணுவ மரியாதை அளித்துக் கௌரவித்ததும் இப்பரிமாணத்தையே காட்டுகின்றது. யுத்தக் கைதிகள் பரிமாற்றம் விடுதலைப் புலிகளின் மனித நேய மேம்பாட்டை ஒருபுறம் வெளிப்படுத்துகின்ற அதேவேளை, தமிழ்மக்கள் மீதான பிரதான பொருளாதாரத் தடைகளை அகற்றுவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்த ராஜதந்திரத்தையும் புலப்படுத்துகின்றது.

இப்பேச்சுவார்த்தைகளின் போது விடுதகலைப் புலிகளின் குழுவிற்குத் தலைமை வகித்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழ விடுதலைப்புலிகள், அரசாங்கத்துடன் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை தொடர்பாக நேரடியாகப் பேசவிரும்பும் எண்ணத்தையும் தெரிவித்துள்ளார். எனவே, சிறிலங்கா அரசாங்கம், நேர்மையாக, நேரடியான பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளுடன் ஈடுபட்டு தமிழ் மக்களின் அபிலாசைகளின் அடிப்படை பிரச்சினையைத் தீர்க்க முன்வருவதே யதார்த்தமான அணுகுமுறையாக இருக்கும்.

ஆயினும், தென்தமிழீழத்தை இராணுவ நடவடிக்கை மூலமும், குடியேற்றங்கள் மூலமும் கபளீகரம் செய்வதற்கு வசதியான அரசியல் நாடகம் ஆடுவதற்கு பேச்சுவார்த்தை என்ற முகமூடியை அரசாங்கம் பாவிக்கும் என்பதும், தமிழ் மக்கள் உணரக்கூடியதே. இவ்விடயத்தில், பல்வேறு மேற்குலக நாடுகளிடம் ஆயுத, நிதி உதவிகளை சிறிலங்கா அரசாங்கம் கோரியுள்ளதானது, சிங்கள இனவாதத்தின் கோரமுகம் இன்னும் முழுமையாகச் சிதைக்கப்படவில்லை என்பதையே காட்டுகிறது. ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நேற்றோர் நீள் இரவில்,
விழிகனக்க,
கால்கடுக்க,
அழ்கடலின் நீளக் கரைப்பரப்பில்,
நண்டு வந்து வளை அமைத்து,
ஒடுங்குகின்ற மணற்பரப்பில்,
அரண் அமைத்து,
எதிரி வரவை எதிர்நோக்கி;
நிலையெடுத்து நின்ற வேளை,
நடுங்குகின்ற பாதங்கள்,
நிலம் தொட மறுக்கின்ற,
நிலைமையையும் பாராது,
ஒடுங்குகின்ற நிலைவெறுத்த
ஒரு அன்னை;
மூதாட்டி,
அவள் அருகில் வந்து;
கேட்டாள்.
"பிள்ளை உணவு வேளைக்கு வந்ததுவோ?
சோறும்,
புளிமாங்காய் போட்ட,
சிறுமீன் குழம்பும் நான் தரட்டோ?
வாங்கோ" என்று நின்றாள்.
"நாளைக்கு,
நானிந்த மண்ணில் நாறிப்போகாமல்.....
என்வீட்டில் தலை சாய,
என் சுடுகாட்டில் நான் வேக,
இன்றைக்கு வாழுகின்ற சித்திரங்கள்;
போங்கோ;
போய்க் கொஞ்சம் காலாற இருங்கோ;
பானையிலை,
சட்டியிலை,
இருக்கிறதெல்லாம் உங்களுக்கே,
மீதமில்லாமல் ஒரு வழி பாருங்கோ."
"இமைக்க மறந்திருந்த,
விழி மூடி,
கொஞ்சம் படுத்திருங்கோ,
பொழுது விடிகின்ற வேளை வரை,
நான் பார்ப்பேன்.
போங்கோ" என்று அவள்,
தலையைக் கோதிவிட்டாள்.
தேசத்தின் வருடலில்,
அவள் சிலிர்த்தாள்.
தேசத்தின் உறவில் நிமிர்ந்தாள்.

- ஜெயா -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# நேருக்கு நேர்

**இடம்:**
**போஷாக்கு புனர்வாழ்வு நிலையம்**
**(Nutrition Rehabilitation Centre)**
***37, காங்கேயன்துறைச்சாலை***
***யாழ்ப்பாணம்***
**காலம்:**
**24.11.1992 (செவ்வாய்)**

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் மாலை நேரத்தில் அங்கே போனால் இக் குழந்தைகளைச் சந்திக்கலாம். இப்படியொரு நிலை உருவாகியது பலருக்கும் தெரியாது. டாக்டர் நச்சினார்க்கினியனின் தகவல் ஒன்று எம்மை கொக்குவிலிலுள்ள போஷாக்கு புனர்வாழ்வு நிலையத்துக்குச் செல்ல வைத்தது. உள்ளே நுழைந்ததுமே டாக்டர் நச்சினார்க்கினியனின் தகவல் சரியானதுதான் என்பதை உணர்ந்து கொண்டோம்.

இங்கும் அங்குமாக நூற்றுக் கணக்கான குழந்தைகள்; பால் வடியும் முகங்களில் பஞ்சம் குடிகொண்டிருந்தது; பூரிப்படையவேண்டிய பெற்றோர்களின் முகத்தில் இனம்புரியாத சோகம்.

உள்ளே சென்று எம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம். சுற்றிப்பார்க்கவும், விபரமறியவும் பரிபூரண ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்தது.

ஏன் இப்படி இந்தக் குழந்தைகளெல்லாம்.....? எமது கேள்வி முடிவடைய முன்னரேயே குழந்தைகளுக்கு மருந்துகள் வழங்கிக் கொண்டிருந்த வெண் சீருடை அணிந்த தாதி ஒருவர் குறுக்கிட்டார்.

உணர்ச்சிகளின் கொந்தளிப்பு அவரில் தெரிந்தது.

"கர்ப்பக்காலத்தில் தாய் ஒழுங்கான, நிறைவான உணவைச் சாப்பிட முடியாததாலேயே இக்குழந்தைகள் வளர்ச்சி குன்றிப் பிறந்தன. இவர்களெல்லாம் ஏதோ அகதி முகாமில் பிறந்த குழந்தைகள் என்று எண்ண வேண்டாம். வீடுகளில் தங்கியுள்ள சாதாரண குடும்பங்களிற் பிறந்தவை தான் இவை."

மூச்சு விடுவதற்கு மறந்த நிலையில் தொடர்ந்தார்....

"கடற்தொழில் முற்றாகத் தடைப்பட்டு விட்டது. மின்சாரம் இல்லாததால் பெரும்பாலான தொழில்கள் நின்றே போய்விட்டன. இவ்வாறு தொழிலற்றுப் போன குடும்பங்கள் ஏராளம்.

இலங்கை அரசாங்கம் சோயா அவரை கூட இங்கே வருவதைத் தடை செய்துள்ளது. திரிபோஷா கூட அரசாங்கம் நினைக்கும் போதுதான் இங்கே வரும்."

குழந்தை ஒன்றின் அழும் குரலைக் கேட்டதும், தனது பேச்சை நிறுத்திக் குழந்தையிடம் சென்று விட்டார்.



**க. ரதீஸ்குமார் - சுழிபுரம்**
**29.12.92 இல் போஷாக்குப் புனர்வாழ்வு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டபோது**



**க. ரதீஸ்குமார் - சுழிபுரம்**
**23.01.93 இல் போஷாக்குப் புனர்வாழ்வு நிலையத்திலிருந்து வெளியேறியபோது**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவபீடத்தைச் சேர்ந்த டாக்டர் சிவராஜா குழந்தைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். இவற்றை ஒழுங்கு படுத்துவதில் குடும்ப நல சேவையாளர்களுடன் உடுவில் மகளிர்க் கல்லூரி இன்ரறக்ற் (Interact) கழக மாணவிகளும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

எங்கள் முகபாவனையில் எங்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் புரிந்து கொண்டவர் போல, விபரக் கோவைகளைத் தாங்கிய வண்ணம் ஒரு இளைஞர் எம்மை அணுகினார். அவர் நிலையத்தின் பொறுப்பாளராக இருத்தல் வேண்டும்.

அட்டவணை ஒன்றைக் காட்டி விளக்கம் தந்தார்.

"பிறக்கும் போது குழந்தையொன்றின் நிறை ஆகக் குறைந்தது 2.500 கிராமாக இருத்தல் வேண்டும். ஆனால், இக்குறிப்பிட்ட நிறையிலும் பார்க்க நிறை குறைந்த நிலையில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

பிறந்து 6 மாதங்களின் பின்னர் 2 மடங்காகவும், 1 வருடத்தின் பின்னர் மூன்று மடங்காகவும் நிறை அதிகரித்தல் வேண்டும். பிறக்கும் போது 2.5 கிலோ கிராம் நிறையிலும், குறைந்த நிறையுடைய பிள்ளைகளுக்கு இங்கு சிகிச்சை அளிக்கின்றோம்.

ஒரு மாதத்தில் நிறை அதிகரிப்பு ஏற்படாவிடில் குழந்தைகளை இங்கேயே தங்கவைத்துச் சிகிச்சை அளிக்கிறோம்."

உள்ளே கூட்டிச் சென்று தங்கிச் சிகிச்சை பெறும் குழந்தைகளைக் காண்பித்தார். "மரஸ்மஸ், குவாசியக்கோரா இது?" எங்கள் கேள்விக்கு சோகம் ததும்பிய நிலையில் ஆமோதிப்பது போல தலையசைத்தார்.



பொ. மயூரன் - உரும்பிராய்
12.01.93 இல் போஷாக்குப் புனர்வாழ்வு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டபோது



பொ. மயூரன் - உரும்பிராய்
03.02.93 இல் போஷாக்குப் புனர்வாழ்வு நிலையத்திலிருந்து வெளியேறியபோது

**"கர்ப்பகாலத்தில் தாய் ஒழுங்கான, நிறைவான உணவைச் சாப்பிட முடியாததாலேயே இக்குழந்தைகள் வளர்ச்சி குன்றிப் பிறந்தன.**

**இவர்களெல்லாம் ஏதோ அகதி முகாமில் பிறந்த குழந்தைகள் என்று எண்ண வேண்டாம். வீடுகளில் தங்கியுள்ள சாதாரண குடும்பங்களிற் பிறந்தவைதான் இவை."**

"இதுவரை இல்லாதிருந்த இவ்விரு நோய்களும் இங்கேயே தோன்றத் தொடங்விட்டன. இது நல்ல அறிகுறியல்ல. புரதக் கலோரிக் குறைபாட்டால் மரஸ்மஸூம், புரதக் குறைபாட்டால் குவாசியக்கோரும் உண்டாகின்றன. இது இவர்கள் உடல் வளர்ச்சியை மட்டுமன்றி, மூளை விருத்தியையும் வெகுவாகப் பாதிக்கின்றது.

பெரும்பாலான குடும்பங்களில் உழைப்பாளியான குடும்பத்தலைவன் உண்பது போக மீதியையே மனைவியும், குழந்தைகளும் பங்கு போட வேண்டியுள்ளது. சமுதாயத்தில் பெண் இரண்டாந்தரமானவள் என்ற கணிப்பு இருப்பதனாலும், கல்வி கேள்வியில் சமதையில்லாததாலும், பெண்ணே தன்னைக் குறைந்ததாகப் பார்ப்பதாலும் இப்படி நடந்து கொள்ள வேண்டியுள்ளது. தாய்மார்களும், குழந்தைகளும், உணவு வினியோகத்தில் விசேட சலுகை வழங்கப்பட வேண்டியோர்." அவரின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உரையாடலைச் செவிமடுத்த வாறே குழந்தைகள் சிலரை 'கிளிக்' செய்துகொண்டோம்.

எஞ்சிய சந்தேகங்களையெல்லாம் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டோம்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரே இப்போஷாக்கு புனர்வாழ்வு நிலையத்தை அமைத்துப் பராமரித்து வருகின்றனர். முதற்கட்டமாக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பகுதியைச் (Kopay M.O.H. Division) சேர்ந்த குழந்தைகளுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. 159 பிள்ளைகள் இங்கு சிகிச்சை பெறுகின்றனர். இத்திட்டம் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இந்நிலையத்தில் வைத்து மருந்து வகைகளுடன் போஷாக்கு உணவு வகைகளும் மற்றும் இலைக்கஞ்சி, பயறு, கொழுக்கட்டை, உழுத்தங்களி, மரக்கறி சூப், முட்டை அரையவியல், பொரி கடலைமா போன்ற உள்ளூர் உற்பத்திகளும் வழங்கப்படுகின்றன.

இவர்களுக்கான மருத்துவ ஆலோசனையை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பிரிவு வழங்கி வருகின்றது.

உள்ளே நின்றிருந்த ஒரு தந்தையிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தோம்.

உதட்டோரம் இழையோடிய ஒரு புன்முறுவலுடன், போக்குவரத்துச் சீரின்மையால், லங்கா அரசின் பொருளாதாரத் தடையால் யாழ்ப்பாணத்தில் உச்ச விலையில் இருக்கும் உணவு வகைகளைத் தன்னால் கொள்வனவு செய்து, மனைவியையும், குழந்தைகளையும் போஷிக்க முடியாத நிலையில் தனது வருமானம் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதற்கான தீர்வு?........

நீண்ட நேர அமைதிக்குப் பின்னர் அவர் எமக்களித்த பதில்:

''எல்லாவற்றிற்கும் கொழும்பை நம்பியிராமல், எங்களிலேயே தங்கியிருக்கும் நிலை விரைவில் உருவாக வேண்டும். லங்கா அரசின் முற்றுகைகள் யாவும் முற்றாகத் தகர்த்தெறியப்படுதலே இந்நோய்க்கான தீர்வையும் தேடித்தரும்."

கனத்த நெஞ்சுடன் அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டோம்.

**நன்றி: "நங்கூரம்" சமூக அறிவியல் ஏடு**

# தமிழரிடமிருந்து கிழக்கைப் பறிக்க அரசு
# திட்டமிட்டுச் செயலாற்றுகிறது

## இணைப்பு எதிர்ப்பின் பின்னணி குறித்து ஆய்வாளர்கள் கருத்து.

**யாழ்ப்பாணம் மே.8**

தமிழரின் பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணத்தை தமிழர்களிடமிருந்து பறிக்க அரசும், அரச அதிகாரிகளும் திட்டமிட்டு தீவிரமாகச் செயல்ப்பட்டு வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முற்று முழுதான சிங்கள மயமாக்கப்பட்ட அம்பாறைத் தொகுதி, அம்பாறை மாவட்டத்தில் இருப்பதால், அம்பாறை மாவட்டத்தையும், சேருவிலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் முழுப்பயன்பாட்டைப் பெறும் நோக்குடன் திருகோணமலை மாவட்டத்தையும், மகாவலி திசைதிருப்பும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் பெறப்போகும் பயன்பாட்டை அநுபவிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு மாவட்டத்தையும், வடக்குகிழக்கு இணைப்பு மூலம் இழப்பதற்கு அரசு தயார் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில், சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள, அரசு பலகோடி ரூபா செலவில் திட்டங்களைச் செயல்ப்படுத்த உள்ளதாகவும், அதற்காக வெளிநாட்டு அமைப்புகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை சிங்கள மக்களின் பிரதேசமாக்கவே, வடக்குகிழக்கு இணைப்புக்கு அரசும், எதிர்க்கட்சிகளும் கூட்டாக எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**நன்றி: உதயன் (08051993)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வருகிறோம்



**கிளிநொச்சி மூர்த்தி**

புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஜீப் ஒன்று வேகமாகச் சென்றது. இது நம்மட பொடியளின்ரை ஜீப். சங்கக் கடைச் சந்தியில் நின்ற செல்லத்துரையர் முகத்தில் பெருமிதம் மலரக் கூறினார்.

முந்தியெல்லாம் ஜீப்பைக் கண்டால் சனமெல்லாம் சந்தியிலே நிற்குமே? இப்ப சந்தோசத்திலை கையைக் காட்டுறம். செல்லத்துரை அண்ணர் கதை சொல்ல ஆரம்பித்தால் ஒரு நாடகத்தையோ, திரைப்படத்தையோ பார்ப்பது போன்ற சுவாரசியம் இழையோடிக்கொண்டிருக்கும். பல சமயங்களில் எப்பொழும் கையில் இருக்கும் தினசரிப்பத்திரிகையில் செய்திகளின் விளக்கவுரையாகவும் அமைந்து விடுவதுண்டு.

வயது 60ஐக் கண்ட செல்லத்துரையர் தீவுப்பகுதியிலிருந்து விவசாயம் செய்வதற்காக 35 வருடங்களுக்கு முன்பே கிளிநொச்சி வந்து குடியேறியவர். தீவுப்பகுதியின் வரண்ட மண்ணிலேயே வெங்காயமும், புகையிலையும் விளைய வைத்த செல்லத்துரையருக்கு, இரணைமடு நீர் பொங்கிப்பாயும் கிளிநொச்சி அள்ளி அள்ளிக் கொடுத்ததில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை.

தொழில் தேடி இந்த மண்ணுக்கு வந்த செல்லத்துரை, இதையே சொந்த மண்ணாக்கி குடும்பத்துடன் இங்கேயே குடியேறிவிட்டார். அதனால்தான் அவர் அடிக்கடி “டேய், நான் கிளிநொச்சியை உருவாக்கினதிலை ஒருத்தனடா.” என்று கைமுஸ்டியை உயர்த்திப் பெருமையுடன் சொல்லிக் கொள்வார்.

தூரத்தே தள்ளாடியபடியே வந்துகொண்டிருந்த பாலசுந்தரம் வாத்தியாரைக் கண்ட முருகேசு, பதட்டத்துடன் செல்லத்துரையரிடம், “அண்ணை வாத்தி வருகிது”

நிமிர்ந்து நோக்கிய செல்லத்துரையர், “ம்... வெறிபோல கிடக்குது....” என்று இழுத்தார்.

முருகேசுவின் முகத்தில் வெறுப்புப் பொங்கி வழிந்தது.

“இவங்களுக்கெல்லாம் ஒரு வாத்தி வேலையும், அதிபர் பட்டமும். தாங்களும் அழிஞ்சு பள்ளிக்கூடத்தையும் குட்டிச் சுவராக்கிறாங்கள்.”

செல்லத்துரையர் ஒரு நீண்ட பெருமூச்சொன்றை விட்டார். “ம்... மனுஷியும், பிள்ளையளும் செல்லடியிலை செத்ததிலிருந்து மனுஷன் இந்தக் கோலம் தானே!”

“அதுக்கு உப்பிடித் தன்ரை மரியாதையை இழக்கிறதே...?”

“உண்மைதான்.... அநீதியாலை பாதிக்கப்படுகிறவை கவலைப்படுறதோட நிண்டு விடுவினம். அநீதியை ஒழிக்கிற வழியைப் பார்ப்பமெண்டு யோசிக்கினையில்லை.”

இந்த வார்த்தைகள் முருகேசுவின் மனதில் என்னவோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். முகம் ஒருமுறை திடீரென்று கறுத்துத் தெளிந்தது. “செல்லத்துரை, நான் துணைப்படைப் பயிற்சிக்கு வர மறுத்ததை வைச்சு நீ குத்திக் காட்டுறாய் என்ன?”

செல்லத்துரையர் மெல்லச் சிரித்தார். “பயந்தாலும், பயப்பிடாட்டியும் எதிரி தாற தொல்லை, தொல்லைதானே? ஆனால் நாங்களும் எங்கடை பிள்ளையளோடை கூட நிண்டால் பெலம் கூடின மாதிரியெல்லே!”

“எனக்கேதேனும் நடந்தால் என்ரை பிள்ளை குட்டியை நீ பார்ப்பியே?”, முருகேசு சற்று ஆத்திரமாய்க் கேட்டார்.

செல்லத்துரையர் மெல்லிய புன்னகையுடன் கூறினார் “இப்ப பிள்ளை குட்டியள் எல்லே எங்களைப் பார்க்குதுகள். அதுகள் இல்லாட்டி முந்தின காலம் மாதிரி ஜீப்பைக் கண்டிட்டு ஓட வேண்டியதுதான்.”

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# உழைக்கும் மக்களின் தளரா உறுதி

**போ**ராட்டப் பளுவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பளுவை மறு தோளிலுமாக, உறுதி தளராது சுமந்து நிற்கும் தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டு கின்றேன். புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்கு முறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகிறேன்.

சாவுக்கும், அழிவுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான, கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப் பற்றை நான் பாராட்டுகி றேன்.

கல்லும், முள்ளும், ஏற்ற மும், இறக்கமும் நிறைந்த, மிகவும் கடினமான பாதாயூடாக எமது விடுதலைப் பய ணம் தொடர்கிறது. எதிரியா னவன் இந்தப் பாதை வழியே மேலும் முட்டுக்கட்டைக ளைப் போடலாம். எமது பயணத்தில் சோர்வையும், களைப்பையும் ஏற்படுத்த, இடையூறுகளை ஏற்படுத்த லாம். எத்தனை தடைகள் ஏற்பட்ட போதும், கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்தி வாரத்தால் கட்டப்பட்ட உறு தியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளது. எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம்.

**தலைவர் பிரபாகரன் கடந்த ஆண்டு சர்வதேச தொழிலாளர் தினத்தை யொட்டி தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியிலிருந்து.**

முருகேசுவுக்கோ ஒவ்வொரு வார்த்தைகளும் தன்னைக் கிண்டல் செய்வது போலவே தோன்றியது. மெல்ல அவர் முகத்தில் கோபத்தின் சாயை படர்ந்தது.

"இன்னும் ஒரு மூண்டு மாதம் போகட்டும். உன்னோட வாறனோ இல்லையோண்டு பார்?"

''ஏன் இப்ப காலம் கூடாதே?"

''என்ரை மூத்தவளுக்கு இப்ப ஏழு மாதம். பேரப்பிள் ளையை ஒருக்கால் தூக்கிக் கொஞ்சிப்போட்டு..... பிறகு பாரன்."

இவை வெறும் ரோஷத்தில் பிறந்த வார்த்தைகள் என்பது செல்லத்துரையருக்கு விளங் கும். ஆனால் அவர் மேற்கொண்டு எதுவும் பேச வில்லை.

மாலை மங்கி, இருள் பரவத் தொடங்கியது. வானத்தில் பறந்த பறவைகளின் ஓசைகள் அடங்கிவிட்டன. ஏதோ ஒரு பயங்கரத்தை எதிர்பார்ப்பது போல் வௌவால்கள் பறந்து மரக்கிளைகளில் மோதிச் சடச டத்துக் கொண்டிருந்தன. சூழல் இருள் கறுத்துக் கிடந்தது.

செல்லத்துரையரும் அவரது குழுவினரும், கண்களால் கரிய இருளைத் துளாவியவாறு காவற் கடமைகளில் ஈடுபட்டி ருந்தனர்.

இப்பொழுதெல்லாம் செல்லத்துரையர் சுருட்டுப் பிடிப்பதில்லை. கள்ளுக் கொட்டிலில் மணிக்கணக்காகக் குந்தியிருந்து அரசியல் வியாக் கியானம் செய்வதைக்கூட விட்டுவிட்டார். முருகேசு கூட அவருடன் சகல விஷயங்களி லும் ஒத்துப்போகக்கூடிய நண்பர்தான். ஆனால் இந்தத் துணைப்படையில் இணைவ தைப் பற்றிக் கதைத்தால் மெல்ல அவ்விடத்தை விட்டு கழன்றுவிடுவார்.

''முருகேசு நல்லவன். ஆனால் பயந்தாங்கொள்ளி" இப்படி அவர் மனம் அசை போட்டது.

* * *

அன்று மிளகாய்க் கன்றுக் குப் பசளை போட்ட அலுப் பில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த முருகேசு அண்மையில் எங்கோ விழுந்து வெடித்த ஷெல் சத்தத்தினால் திடுக்கிட்டு விழித்தார்.

அவருக்கு முன்னாலேயே விழித்துப் பரபரத்துக் கொண்டு நின்ற மனோன் மணி "ஆமி வெளிக்கிட்டுட் டாங்கள் போலை கிடக்குது" என்றாள் பயத்துடன்.

முன்தெருவால் சனங்கள் கையில் கிடைத்ததை மட்டும் எடுத்துக்கொண்டு அவசர அவ

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சரமாக ஓடிக்கொண்டிருந்த னர். சமீபித்துக் கொண்டிருந்த ஷெல் சத்தங்களும், வெடி யோசைகளும் அவர்கள் ஓட்டத் தைத் துரிதப்படுத்தின.

"வா! வா! நாங்களும் போவம்" முருகேசு பதட்டத்து டன் மனைவியைத் துரிதப்ப டுத்தினார்.

அவர்கள் உயிரைக் கையிலை பிடித்துக் கொண்டு ஓடிய ஓட்டம் அடுத்த ஊர்ப்பாடசாலை வளவுக்குள் கால் வைத்த பிறகுதான் நின்றது. பாடசாலை ஏற்க னவே இடம்பெயர்ந்தவர்க ளால் நிரம்பி வழிந்தது.

"மனோன்மணி! பிள்ளை யும், மருமோனும் என்ன பாடோ தெரியயில்லை."

அப்பொழுதுதான் அவர்கள் மனதில் மகளின் வயிற்றில் வளரும் தனது பேரப்பிள்ளை யின் நினைவு தோன்றியது.

"ஒருக்கால் சனத்துக்கை பாருங்கோ. எங்களுக்கு முன்னாலை வந்தினமோ தெரியேல்லை." மனோன்மணி யின் வார்த்தைகளில் ஒரு நம்பிக்கை இளையோடினா லும், நெஞ்சுக்குள் ஒரு நடுக் கம் இல்லாமல் இல்லை.

முதுரை மரக் கொப்புக ளைக் கீழே தள்ளிவிட்டு எட்டிப்பார்த்த பின்னிலவின் மங்கிய வெளிச்சத்தில் மகளை யும், மருமகனையும் தேடிய முருகேசருக்குக் கவலைப்பட் டுக் குழம்புவதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை. அவர் களைக் கண்டதாகச் சொல்லும் ஒரு மனித ஜீவன் கூட, அந்தப் பெரிய கூட்டத்தில் இருக்க வில்லை.

கிழக்கு மெல்ல மெல்ல வெளிக்கின்ற அந்த நேரத்தில் தான் வெடிச்சத்தங்கள் ஒரு வாறு ஓய்ந்தன.

நித்திரையின் மையால் சோர்ந்திருந்த கண்களை விட, முருகேசுவின் மனம் கூடுதலா கத் தொய்ந்து போயிருந்தது.

"மனோன்மணி, நான் ஒருக் கால் போய்ப் பார்த்துக் கொண்டு வரட்டே?"

"இப்பதான் வெடிச்சத்தம் நிண்டிருக்குது. கொஞ்சம் பொறுத்துப் போங்கோ!"

நடப்பது நடக்கட்டும் என்ற நினைவு மேலெழும்பவே முரு



## சர்வதேச தொழிலாளர் தினம்

**மேதினப் பேரணியில், தலைவர் பிரபாகரனின் உருவப் படத்தை தமிழீழ மக்கள் தாங்கிச் செல்வதையும், அப்பேரணியில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கேசு மனைவியிடம் எதுவும் சொல்லாமலே பாடசாலையை விட்டு வெளியே வந்தார். மனோன்மணியின் பிள்ளைப் பாசம், தடுக்க வேண்டும் என்று எழுந்த உணர்வை அப்ப டியே அமுக்கிவிட, அவளும் அவர் போகும் பாதையைப் பார்த்தவாறே நின்றுகொண் டிருந்தாள்.

* * *

குழம்பிய மனதுடன், தெரு வால் நடந்து கொண்டிருந்த முருகேசுவின் கண்களில், தோளில் துவக்குகளுடன் சிலர் நடந்து வருவதைக் கண்டதும் நெஞ்சு ஒரு கணம் துணுக்குற் றது. சற்றுக் கூர்ந்து அவதா னித்த பின்புதான் அவர்கள் கட்டியிருப்பது சாரம் என்பதை யும், முன்னால் வருவது செல்லத்துரையர் என்பதையும் அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

முருகேசு மெல்ல அவர் களை நெருங்கினார்.

"முருகேசு! என்ன விடியக் காலமை.....?"

"அண்ணை! பிள்ளையை யும், மருமோனையும் காண யில்லை"

"அவை பின்னாலை வருகி னம்." செல்லத்துரையரின் வார்த்தைகள் முருகேசுவின் வயிற்றில் பாலை வார்த்தன. ஆமி வெளிக்கிடயுக்கை அவையாலை இஞ்சாலை வர ஏலாமல் மாட்டுப்பட்டுப் போச்சினை. எங்கடை தம்பி யவை களையாமல் நிண்டு அடிபட்டு, ஆமியைத் திருப்பிக் கலைச்சுப் போட்டினை! நாங்க ளும் தம்பியவையோடை பக்கத்திலை நிண்டு எல்லா உதவியும் செய்தனாங்கள்."

செல்லத்துரையர் முகத்தில் பெருமிதம் தோன்றியது. தன்னுடைய மகளையும், மருமக னையும், பிறக்கப்போகும் பேரப்பிள்ளையையும் காப்பாற் றிய அவர்களைக் கையெடுத் துக் கும்பிட வேணும் போன்ற ஒரு உணர்வு முருகேசர் மன தில் தோன்றியது.

செல்லத்துரையர் தொடர் ந்தார். "பேரப்பிள்ளையைக் கண்ட பிறகுதான் எங்க ளோடை வரப்போறனெண் டாய். தம்பியவையும், நாங்க ளும் இரவு ஆயுதமேந்தி அடி பட்டுத் திருப்பிக் கலையாட் டில் நீ எந்தப் பேரப்பிள்ளை யைக் கொஞ்சியிருப்பாய்?"

முருகேசுவின் கண்களில் ஒரு புதிய ஒளி பிறந்தது. செல்லத்துரையரின் தோளில் கிடக்கும் துப்பாக்கியையும், தோளில் குறுக்காகத் தொங்கிய தோட்டாப் பட்டி யையும் ஒருவித நேசபாவத்து டன் பார்த்தார். அந்தத் துப்பாக்கி தன்னுடைய தோளில் ஏறுவதான ஒரு பிரமை தோன்றவே ஒடுங்கியி ருந்த அவரது நெஞ்சு தானா கவே நிமிர்ந்தது. ■■

# அன்றும் இன்றும்



மாலை கழிந்த கருக்கல் நேரம்

வானில் பறந்த ஒருவகைக் குருவிகளைப் பார்த்து தாத்தா கூறினார்,

"அந்தா... உழவாரக் குருவி!"

"பார்வைக்கு 'உழவாரம்' போல இருப்பதா லேயே அதற்கு அப் பெயர்." என பேரப்பிள் ளைகளுக்கு விளக்கம் கொடுத்தார்.

அண்ணார்ந்தபடி அவர்கள் அவற்றைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சிலநொடிகளின் பின் பேரப்பிள்ளைகளில் இளையவள் துள்ளிக்குதித்தாள்.

"இல்லை, அது பொம்மர்குருவி"

அந்தா... குத்துது குத்துது கு...து...ஊ

குழந்தையின் கற்பனையில் தாத்தாவும் மூழ்கின்றார்.

"இது புதுயுகம்; உவமைகளும் புதியனவாகத் தான் இருக்கும்." என அவரது பொக்குவாய் கூறிக்கொள்கிறது.

(உண்மை நிகழ்விலிருந்து.)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆனையிறவு எங்கள் தாய்நிலம்



ஆனையிறவு எங்களின் தாய்நிலம்,
ஆயினும் அங்கே எதிரியின் பாசறை.
எங்களின் நேர்வழி எதிரியின் கையில்
என்றபின் தமிழரே இன்னுமா உறக்கம்?
மானத்தை விற்றபின் வாழ்வது வாழ்வா?
பாதையைத் திறந்திட பேரங்கள் நன்றா!

படவிளக்கம்: ஆனையிறைவை ஆக்கிரமித்திருக்கும் சிங்கள இராணுவம் எங்கெங்கே, எவ்வாறு நிலைகொண்டிருக்கிறது என்பதைக் காட்டும் முகாமின் மாதிரியை மக்கள் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# கிராமிய கண்காட்சி







தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கிராமிய உற்பத்திக் குழுப் பிரிவு, பனையின் மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தொப்பி, பாய், இடியப்பத்தட்டு, குப்பை போடும் கூடை, நீத்துப் பெட்டி, பை, திருகணி, கால் மிதி, அலங்காரப் பொருட்கள், இனிப்பு வகைகள், பான வகைகள் எனப் பலதரப்பட்ட பொருட்களை மக்கள் பார்வையிடும் வண்ணமாக கிராமங்கள் தோறும் நடமாடும் கண்காட்சியகங்களை அமைத்து வருகிறது. மக்கள் அவற்றை உபயோகிக்கும் முறைகளையும், தயாரிக்கும் முறைகளையும் வேறு பல அரிய ஆலோசனைகளையும், ஊக்கத்தையும் அளித்து உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் பாவனையை மக்கள் மத்தியில் பெருக்கிவருகிறது.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கசியும் தகவல்கள்

பாதுகாக்கப்பட வேண்டிய வைகளல்ல என நாம் கருதுப வைகளே, சிலவேளைகளில் தேசத்தின் மிகப்பெரிய இரகசி யங்களாகவும் இருக்கும்!

'காட்டிக் கொடுத்தால் கற்பூ ரம் தருவினமாம்;

கற்பூரம் என்பதற்காக நாம் காக்கைவன்னியன் ஆவதா?

யாழ்ப்பாணம் திருநெல்வே லிச் சந்தியில் மக்கள் பார்வைக் கென வைக்கப்பட்டிருக்கும் ஒரு அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டுள்ள வாக்கியம் இது.

சிங்கள அரசால் தடைசெய் யப்பட்ட பொருட்களை வவு னியா பாதையினூடு உள்ளே கொண்டுவர அனுமதி தேவை யாயின் "புலிகளைப் பற்றித் தகவல் தாருங்கள்." என பயணி களிடமும் வியாபாரிகளிட மும் படையினர் கேட்கின்றனர்.

இன உணர்வற்ற சில கோடாரிக் காம்புகள் படையி னர் விரிக்கும் ஆசை வலைக் குள் வீழ்ந்து கற்பூரத்திற்காக வும், 'ரோச் பற்றரி'களுக்காக வும், மண்ணெண்ணெய்க்காக வும், பெறுமதியான பல தக வல்களை எதிரிக்கு வழங்கி, எமது விடுதலைப் போராட் டத்திற்குத் தீங்கிழைக்கின்றனர்.

இதைக் கருத்திற் கொண்டு இரத்தினச் சுருக்கமாகவும், இலக்கிய நயம்படவும் எழுதப் பட்ட ஒரு வாக்கியந்தான், மேற்குறித்த சுலோகம் ஆகும்.

குறள் பாணியிலான இவ்வாறான பல சுலோகங்கள் அண்மைக் காலத்தில் குடா நாட்டுப் பத்திரிகைகளில் பிரசு ரிக்கப்பட்டு வருவதுடன், ஆங்காங்கே உள்ள அறிவித்தல் பலகைகளிலும் எழுதப்பட் டுள்ளன.

மக்கள் அரங்கு என்ற மாபெரும் சமுத்திரத்துள் மக்க ளுக்கு மக்கள் முகத்தையும், எதிரிக்கு எதிரி முகத்தையும் காட்டும் ஒரு சில மனித விலங்குகளையிட்டு மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென அந்தச் சுலோ கங்கள் தூண்டுகின்றன.

தமிழீழத்தில் நிகழ்த்தப்படும் ஒரு விமானத்தாக்குதலின் பின்னால் அல்லது ஒரு இரா ணுவ நடவடிக்கையின்

> **'காட்டிக் கொடுத்தால் கற்பூரம் தருவினமாம்;**
>
> **கற்பூரம் என்பதற்காக நாம் காக்கைவன்னியன் ஆவதா ?**

பின்னால் சில 'தமிழர்களே' (உளவாளிகள்) சம்பந்தப்பட் டுள்ளனர் என்ற கசப்பான உண்மையை, தமிழீழ மக்கள் முதலில் மனதில் வைத்திருக்க வேண்டும்.

இந்த உளவாளிகள் குறித்த இடத்திற்கு நேரடியாகச் சென்று தகவல்களைச் சேக ரித்து எதிரிக்கு வழங்குவதென் பது மிகக் குறைவு.

அப்பாவித்தனமாகவும், பொறுப்பற்ற முறையிலும் போராட்ட நடவடிக்கைக ளைப்பற்றிக் கதைக்கும் மக்களி டமிருந்தே பெரும்பாலும் உள வாளிகள் தகவல்களைப் பெற்று, மீண்டும் அதை உறு திப்படுத்தி எதிரிக்கு வழங்கு கின்றனர்.

உளவாளிகள் எனும் பொழுது அவர்கள் எங்கோ தொலைதூரத்தில் இருந்து அல்லது அடுத்த ஊரிலிருந்து வருகின்றார்கள் என நினைக்க வேண்டாம். உங்கள் அயலி லேயே ஒரு உளவாளி இருக்க லாம். உங்கள் பாடசாலை நண்பனது/நண்பியினது உறவி னர் ஒருவர் உளவாளியாகவும் இருக்கலாம்; அல்லது நீங்கள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


வேலை செய்யும் இடத்தில்/வேலைத் தளத்தில் ஒரு உளவாளியும் வேலை செய்யலாம். இவ்விதம் உளவாளிகள் எங்கும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் இருக்கலாம். ஆனாலும் அவர்களுக்குத் தேவையான தகவல்களை, தங்களையும் அறியாமல் மக்களே வழங்குகின்றனர் என்ற அதிர்ச்சி தரும் உண்மையை மக்கள் கவனத்திற் கொள்ளல் வேண்டும். ஆகவே மக்கள் எச்சரிக்கை உணர்வுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் இருந்து தங்களுக்குத் தெரிந்த போராட்ட நடவடிக்கைகளை, புலிகள் இருப்பிடங்களை மற்றவர்களுக்குக் கூறாது இரகசியம் காப்பதன் மூலம், தகவல்கள் எதிரியிடம் சென்றடைவதைப் பெருமளவு தடுக்க முடியும். இதனால் அழிவையும் துன்பத்தையும் கணிசமாகத் தவிர்க்கலாம்.

பெரும்பாலும் 'ஊர்ப்புதினங்கள்' என்ற ரீதியிலேயே, இரகசியமாக இருக்க வேண்டிய தகவல்கள் பரகசியப்படுத்தப்படுகின்றன. போராட்ட நடவடிக்கைகளையும் ஒரு 'புதினமாக' செய்தியாகக் கருதி, மக்கள் அவற்றையும் மற்றவர்களுடன் கதைக்கின்றபோதே தகவல்கள் பரவுகின்றன.

நண்பர்கள் கதைக்கும்போதும், உறவினர்கள் சந்திக்கும்போதும், நாட்டு நடப்புகள் பற்றிய கதைகள் எழும்போதும், விழிப்புணர்வும், எச்சரிக்கை உணர்வுமின்றித் தங்களுக்குள் 'புதினங்களைப்' பகிர்ந்து கொள்கின்றனர்.

இத்தகைய சம்பாஷணைகளில் ஈடுபடுபவர்களிடம் எந்த விதமான துரோக சிந்தனைகளும் இருக்காது.

தாங்கள் கதைக்கும் 'புதினங்கள்' உளவாளிகளின் காதுகளைச் சென்றடையக் கூடாத 'இரகசியத் தகவல்கள்' என்ற உண்மையையும் பலர் புரிவதில்லை. இதற்கொரு காரணமும் உண்டு.

பொதுவாக 'இரகசியம்' என்பது இருவருக்குள் இருக்கும் விடயமென்றோ அல்லது விரல் விட்டெண்ணக்கூடிய ஒரு சிலருக்குள் இருக்கும் விடயமென்றோதான் பெரும்பாலான மக்கள் கருதுகின்றார்கள்.

இந்த எண்ணப்பாட்டின் காரணமாகவே, குறித்த ஒரு பகுதியில் அல்லது பிரதேசத்தில் மக்கள் பலர் அறியத்தக்கதாக நடைபெறும் போராட்ட நடவடிக்கை ஒன்றை இரகசியமானது அல்ல என எண்ணுகிறார்கள். இதனால் அந்தப் போராட்ட நடவடிக்கையைப் பற்றித் தமது நண்பர்களுடனும், உறவினர்களுடனும் எந்தவித தயக்கமுமின்றிக் கதைக்கின்றனர்.

கேட்டால், 'அது இரகசியமானதில்லையே',

'ஊர் சனமெல்லாம் அறிஞ்சதுதானே!'

'அது ஆமிக்குத் தெரிஞ்சிருக்குமே' என ஊகித்துப் பதில் கூறவும் முனைகின்றனர்.

மக்களின் சிந்தனை இப்படியாக இருக்கும் போதுதான் பலரறியக்கூடியவாறு போராட்டத் தகவல்கள் பரவி, ஒரு கட்டத்தில் அவை உளவாளிக்கும் சென்று, இறுதியில் எதிரியிடமும் சென்று சேர்ந்துவிடுகின்றன. அதனால் வரும் அனர்த்தங்களை சில காலங்களின் பின் மக்களும் புலிகளும் அனுபவிக்கின்றனர்.

உண்மையில் பெரும்பாலான மக்கள் கருதுவதுபோல அவ்வளவு சுலபத்தில் 'இரகசியத்திற்கு' வரையறையைக் கூறி விட முடியாது.




**சிறிலங்கா அரசு தொடராக தமிழ் மக்கள் மீது பல தடைகளை விதித்து வருகின்றது. அத்தடைகளில் ஒன்றாக தமிழீழத்திற்கான தபால் போக்குவரத்துத் தடையையும் கொண்டு வந்தது. அவ்வேளையில், ஏராளமானவர்களின் அந்தரங்க விடயங்களைத் தாங்கிச் செல்லும் கடிதங்கள் உடைத்து வாசிக்கப்பட்டன; அவற்றுள் இருந்த பணங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த தபால் தடையை விளக்கும் முகமாக சிரித்திரனில் வெளிவந்த கருத்தோவியமே இது.**

**(நன்றி சிரித்திரன்)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காலம், சூழல், நடவடிக்கையின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப 'இரகசியம்' என்ற சொல்லின் பொருளும் அதன் கனபரிமாணமும் விரிந்து செல்லும்.

ஒரு நடவடிக்கை இரகசியமானது என்றால், அந்த நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் எல்லாரும் சேர்ந்து பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டு, தகவல்கள் வெளியில் செல்லாதவாறு பேண வேண்டும். ஒருவர் எச்சரிக்கை உணர்வில்லாமல் நடந்து கொண்டாலும் தகவல்கள் எதிரியைச் சென்றடைந்து விடும்.

'நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் எல்லோரும்' என்பதன் அர்த்தம்

அது இருவராகவும் இருக்கலாம்; விரல் விட்டு எண்ணக்கூடிய சிலராகவும் இருக்கலாம்; அல்லது ஒரு ஊரின் மக்களாகவும் இருக்கலாம்; மாவட்டத்தின் மக்களாகவும் இருக்கலாம். அல்லது ஒரு நாட்டின் மக்களாகவும் இருக்கலாம். இவ்விதம் குறித்த பகுதியினர் அனைவரும் இணைந்துதான் தகவல்கள் கசியாது பாதுகாக்க முடியும்.

சிலர் தாங்கள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி தங்களை உயர்த்திக் காட்டுவதற்காக, தங்களுக்குத் தெரிந்த போராட்ட நடவடிக்கைகளை மற்றவர்களுக்கும் கூறுகின்றனர். அதேவேளை 'இரகசியம்' என்று தெரிந்திருந்தும், மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாது என்று உணர்ந்தும், சிலர் 'கதை ருசி'யில் தகவல்களைப் பகிரங்கப்படுத்தி விடுகின்றனர்.

இன்று எமது மண்ணில் உக்கிரமாக ஒரு விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றது.

இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னர் புலிகள் இயக்க அங்கத்தவர்களிடம் மட்டும் இருந்த போராட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள், இன்று மக்கள் அரங்கு வரை விரிந்துவிட்டன.

மக்களும் போராட்ட நடவடிக்கையின் ஒரு அங்கமாக மாறிவிட்டனர்.

எனவே, புலிகள் இயக்க உறுப்பினர்கள் பேணிய தகவல்கள் இன்று மக்களும் சேர்ந்து பேணவேண்டிய இரகசியமாக மாறிவிட்டது.

எனவே, ஒரு போராட்ட நடவடிக்கை மக்களுக்குத் தெரியக்கூடியவாறு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், அது பேணப்படவேண்டிய 'இரகசியம்' என்பதை மக்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இந்த விடுதலைப்போர், களத்தில் வெற்றிவாகை சூட வேண்டுமாயின் சிறந்த தந்திரோபாயங்களும், உன்னத அர்ப்பணிப்புகளும் தேவை. இவை மட்டும் இருந்தால் போரை வென்றுவிடலாமா? இல்லை.

இந்த போர்த்தந்திரங்களும், உரிய அர்ப்பணிப்புகளும் பெரு வெற்றியைத் தேடித்தர வேண்டுமாயின் இரகசியம் காப்பது மிக முக்கியம். இல்லாவிடின், தந்திரோபாயங்களும் பலிக்காது; உயிர் அர்ப்பணிப்புக்களும் அர்த்தமற்றுப்போகும்.

எனவே, தமிழீழத்தின் குடிமக்கள், அது மாணவர்களாக இருந்தாலும் சரிதான், வளர்ந்தவர்களாக இருந்தாலும் சரிதான் அவர்களுக்குத் தெரிந்த போராட்ட நடவடிக்கைகளை, புலிகளின் நடமாட்டங்களை மற்றவர்களிடம் கதைக்காது இரகசியம் பேணவேண்டும். அதேசமயம், சந்தேகத்திற்கு இடமான முறையில் ஒருவரது நடவடிக்கை அமையுமானால் உடனடியாக புலிகளின் முகாமுக்கு அறிவிக்கவேண்டும்.

**மண்ணைக் காதல் செய்வோம்**
**மறவர் தினம் போற்றிடுவோம்**
**எம்மை மறந்து எதனையும் பேசமாட்டோம்.**

## யுத்தத்தின் போதும் பாதுகாக்கப்பட்ட ஜேர்மனிய நூல்நிலையம்

ஐரோப்பாவிலுள்ள சிறந்த விஞ்ஞான நூல்நிலையங்களில் பேர்லினில் உள்ள ஜேர்மன் அரசு நூல்நிலையமும் ஒன்று. முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக இயங்கும் இந்த நூல்நிலையத்தில் இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் உண்டு. இங்குள்ள புத்தக அலுமாரிகள் நீளங்களைக் கூட்டினால் 100 கிலோமீற்றருக்கு மேல் வரும்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது இந்த நூல்நிலையத்தின் புத்தகங்களையும் சுவடிகளையும் ஜேர்மனி முழுவதும் 30 இடங்களில் மறைத்து வைத்திருந்தார்கள். அப்படியிருந்தும் 36 இலட்சம் புத்தகங்களில் 18 இலட்சம் புத்தகங்கள் மட்டுமே யுத்தத்தின் பின் கிடைத்தன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# சிறப்பு சித்திபெற்ற மாணவர்களுடன் ஓர் சந்திப்பு



**1992** ஆகஸ்ட் திங்கள் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் யாழ். குடாநாட்டில் மொத்தம் பதினொரு மாணவர்கள் நான்கு பாடங்களில் சிறப்பு சித்தியெய்தியுள்ளனர்(4A).

யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த குணரத்தினம் ஞானரஞ்சன், மகாலிங்கம் சிறீகரன் (பொறியியல்), கதிர்காமநாதன் கேந்திரன் (வர்த்தகம்) சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த லோகேஸ்வரன் சேகரன், சிவபாதலிங்கம் சிவவாகீசர், (பொறியியல்) யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த கனகலிங்கம் கிருஷ்ணகுமார் (வர்த்தகம்) பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் தயாபரன், நடராசா கணநாதன் (பொறியியல்) வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுதா தாமோதரம்பிள்ளை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தாரகா டானியல், கனகரத்தினம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஜ. யூட் கிறேசியன் (வர்த்தகம்) ஆகியோரே இவர்கள்.

போர்ச்சூழல், பொருளாதாரத்தடை இவற்றினூடு பின்னிப் பிணைந்துள்ள பலவிதமான பிரச்சினைகள், நெருக்கடிகள் மத்தியில் இம்மாணவர்களின் ஆற்றல் ஒரு சாதனை என்றே கூறலாம்.

* குடாநாட்டைச் சூழ்ந்துள்ள போர் அச்சுறுத்தல்கள், அவ்வப்போது இடம்பெறும் ஏவுகணை, வானூர்தித் தாக்குதல்கள், பாடசாலைகள் மீதான தாக்குதல்கள், படையினர் ஆக்கிரமிப்பால் ஏற்படும் இடம்பெயர்வுகள், பொருளாதாரத் தடையினால் ஏற்பட்டுள்ள இன்னல்கள், மின்சார



## வாழ்வின் முழுமையையும் தரிசிக்கும் கல்வி.

கல்வி என்பது அறிவு சார்ந்தது.

ஒருவர் தன்னைப்பற்றியும், தனது சமூகவாழ்வு பற்றியும், தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு கல்வி அத்தியாவசியமானது.

கல்வியறிவு ஒருவனது ஆளுமையைச் சிறப்பிக்கிறது. அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அவனை முழு மனிதன் ஆக்கிவிடுகிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து, வளர்ந்து வருகின்றது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றது. மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறிவிடுகின்றது.

இந்த அறிவுசார் நவயுகத்தில் வரையறுக்கப்பட்ட துறை சார்ந்த படிப்புக்கள் ஒரு பரந்த உலகப் பார்வையையும், விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதல்ல. எனவே, துறை சார்ந்த பள்ளி, கல்லூரிப் படிப்புகளோடு, பொது அறிவுத் திறனையும், எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலத்தின் தேவையும் கூட...

(தியாகி அன்னை பூபதி நினைவுப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டும், தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்தும் தெரிவித்து, தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் விடுத்த அறிக்கையிலிருந்து.)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மில்லாத வேளை குப்பி விளக்கில் கூட படிப்பதற்கு முடியாத நிலையில், மண்ணெய் தட்டுப்பாடு, இன்னோரன்ன சிக்கல்கள் மத்தியிலும் சிறப்புச்சித்தி எய்தியிருக்கிறார்கள்.

* இச்சித்திக்கு பாடசாலையா, தனியார் கல்வி நிறுவனங்களா முக்கிய காரணம்?

* மாணவர்கள் பாடசாலைக் கல்வியில் மட்டுமே தங்கள் முழுநேரத்தையும், திறமையையும் பயன்படுத்த வேண்டும். சமூகப்பணி, கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற துறைகளில் மாணவர்கள் ஈடுபட்டால் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்கிற சிலரின் கருத்து பற்றி அவர்களிடம் கேள்விகள் தொடுத்தோம்.

**செல்வன் லோ. சேகரன் கூறியபோது,**

தான் படிப்பில் கவனம் செலுத்தியதோடு, லியோ கிளப்பில் இணைந்து பல சமூகப் பணிகளும் ஆற்றியுள்ளதாகக் கூறினார். தனக்கு வெளிநாடு சென்று கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தால் மீண்டும் இங்கேயே திரும்பிவந்து சேவை புரிய விரும்புவதாகவும் கூறினார்.

**செல்வன் க. கேந்திரன் கூறும் போது,**

வேறு சமூகப் பணியில் ஈடுபட்டால் கல்வியில் முனைப்பு செலுத்த முடியாது என்று சில மாணவர்களும், பெற்றோரும், ஆசிரியர்களும் கருதுவதை இவர் ஏற்க மறுத்தார். இவர் பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு கவிதைகள் எழுதி வருகிறார். தான் கலை பண்பாட்டுக் கழகத்துடன் இணைந்து சுமார் பதினைந்து தெருக்கூத்துக்களில் பங்கு கொண்டதாகவும், கிட்டத்தட்ட நூறு தடவைகள் இவை நடாத்தப்பட்டதாகவும் இவர் கூறினார். நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் தலைவராக இருந்து பணிகள் செய்வதாகவும், இந்திரன் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் ஆசிரியராக சேவை செய்வதாகவும் இவர் கூறினார்.

**செல்வன் சிவவாகீசர் சொல்கையில்,**

தனது மூன்று சகோதரர்கள் பட்டதாரிகள் எனவும், தந்தை பாடசாலை அதிபராக கடமையாற்றுவதாகவும் தெரிவித்தார். இச்சூழல் இயல்பாகவே தம்மைக் கல்வியில் முனைப்புப் பெற வைத்தது எனவும் அவர் சொன்னார். 'இன்டறெக்ட்', 'றோட்டறெக்ட்' போன்ற கழகங்களில் அங்கத்தவராக தாம் இருப்பதாகவும், உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

**செல்வன் க. கிருஷ்ணகுமார் கூறுகையில்,**

தான் சாரணனாக இருப்பதாகவும், உதைபந்தாட்டம் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளதாகவும் சொன்னார்.

"பாடசாலைக் கல்வி தவிர்ந்த வேறு பணிகளில் ஈடுபடுவதால் கல்வி சீர்குலையலாம் என்கிற கருத்து முற்றிலும் பொய்யானது. எல்லாவற்றிற்கும் நேரத்தை ஒதுக்கி அவ்வவ் துறைகளில் முனைப்புப் பெற முடியும். ஒன்றிலேயே

# ஊட்டச்சத்துக் குறைபாடு

போரினால் உண்டாகி வரும் பாதிப்புக்களில் ஊட்டச்சத்துக் குறைபாடும் ஒன்றாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊட்டச்சத்துக் குறைபாடு பெரும் ஆபத்தான நிலைக்கு வந்திருப்பதாக வைத்திய வட்டாரங்கள் சிவப்புக்கொடி காட்டி வருகின்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சுகாதார நிலையத்தினர் கடந்த வாரம் ஊட்டச்சத்துக் குறைபாடு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை நடத்தினர். அந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட வைத்திய நிபுணர்களும், வைத்தியத்துறை சார்ந்த புத்திஜீவிகளும் ஊட்டச்சத்தினால் உருவாகியுள்ள ஆபத்தை எடுத்து விளக்கினர்.

ஊட்டச்சத்துக் குறைபாடு எமது மண்ணின் வருங்காலப் பிரசைகளான குழந்தைகளையும், மற்றும் முதியவர்களையும் பெருமளவில் பாதித்துள்ளதாக எடுத்துச் சொன்னார்கள். யுத்தநிலை தொடர்ந்தால், பொருளாதாரத் தடை தொடர்ந்தால், உணவுப் பற்றாக்குறை நீடித்தால் இன்னும் ஓரிரு வருடங்களில் ஊட்டச்சத்தின்மை சகல வயதினரையும் பாதித்து, பேரழிவுக்கு வகை செய்யலாம் என்றும் எச்சரித்தார்கள்.

மனித உடம்பு இயங்குவதற்கு மூலாதாரமானது சக்தி. அந்த சக்தியை உடலில் உற்பத்தி செய்பவை காபோஹைதரேத்துக்கள், புரதம், கொழுப்பு, கனியப் பொருட்கள், விட்டமின்கள் என்பன ஆகும். இந்த ஐந்து மூலப் பொருள்கள் குறிப்பிட்ட அளவில் உடலில் உணவு மூலம் செறிந்தால்தான், இயக்கத்துக்குரிய சக்தியை (கலோரியை) ஆக்கலாம். ஊட்டம் செறிந்த சம உணவு உட்கொள்ளாத பட்சத்தில், உடல் இயக்கத்திற்கு வேண்டிய சக்தி பிறக்காது. சக்தி குறைபாடு பலவித நோய்களுக்கும் உபாதைகளுக்கும் இட்டுச் செல்லும். மரணம் சம்பவிக்கவும் ஏதுவாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மூழ்கிப்போய் மற்றையதை கைவிடுவது என்பது போதை வஸ்துக்கு அடிமையாவது போன்றது." இவ்வாறு அவர் கருத்துத் தெரிவித்தார். நாடக அரங்க கல்லூரியினரோடு தொடர்பு கொண்டு தாம் நாடகத்துறையில் ஈடுபட்டிருப்பதாகவும், தமிழ் மன்றத் தலைவராக இருப்பதாகவும், பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்கள் பெற்றுள்ளதாகவும் இவர் தெரிவித்தார். ஆனையிறவு சமரின் போது இவர் சாரணராக அங்கு சென்று பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**செல்வன் யூட் கிரேசியன்,**

தான் மூன்று மாதமளவிலேயே 'ரியூசன்' சென்றதாகவும், தனது பாடசாலையான கனகரத்தினம் ம.மா.வி. இல் கற்ற கல்வியே தனது சிறப்புச் சித்திக்குக் காரணம் எனவும் கூறினார். தனது பாடசாலையில் உள்ள திறமையான ஆசிரியர்களின் பங்கு தனது சித்திக்கு முக்கியமான காரணமெனச் சொன்ன யூட் கிரேசியன் உதைபந்தாட்டத்தில் கப்டனாகவும் உள்ளார். 'இண்டரெக்ட்' கழகம், 'ஏ.எல். யூனியன்' 'கிறிஸ்ரியன் யூனியன்' 'சென்றோக்ஸ் கிளப்' ஆகியவற்றில் இணைந்து பணியாற்றியுள்ளதாகவும் தெரிவித்தார். இவர் குருநகரைச் சேர்ந்தவராதலால், கரையோரக் கடற்படையினரின் அச்சுறுத்தல்களிற்கு தமது வீடு இலக்கானதாகவும், படிக்கும்போதே சில சமயங்களில் தனது உறவினரோடு கடற்றொழிலுக்குச் செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக இவர்கள் அனைவரும் தெரிவித்த கருத்துக்களில் இருந்து, பலவித இடையூறுகளின் இடையிலும் சளைக்காது கல்வியில் கவனம் செலுத்தியமை தெரியவந்தது.

நீண்டகால நோக்கில் தனியார் கல்வி நிறுவனங்கள் தீமை பயப்பனவாக இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் அவற்றின் உதவி அவசியமானது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

பல பட்டதாரி ஆசிரியர்கள் பாடசாலைகளில் இருப்பினும், தனியார் கல்வி நிறுவனங்களில் பட்டதாரி அல்லாதவர்கள் கற்பித்தலில் திறமையானவர்களாக உள்ளதாகக் கூறப்பட்டது. காரணம் கற்பித்தல் கலை (Art of teaching) எல்லோருக்கும் ஒரேமாதிரியாக வருவதில்லை. இதுவும் மாணவர்கள் தனியார் கல்வியை நாடுவதற்கு காரணமாக அமைகிறது. சில பாடசாலை ஆசிரியர்கள் 'ரியூசன்' வகுப்பும் நடாத்துகின்றனர். பாடசாலையில் கற்பித்துவிட்டு "மேலதிகமாக விளங்கப்படுத்த வேண்டுமெனில் ரியூசனுக்கு வா!" என்று சொல்கிற நிலைமையும் உண்டு. அப்படி ரியூசனுக்கு செல்லும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் தனியான கவனிப்புகளும் உண்டு. அதே நேரம், பாடசாலையில் தம்மிடம் படிக்கும் மாணவர்கள் தமது ரியூசன் வகுப்புகளுக்கு வரக்கூடாது என நேர்மையு

எனவே ஊட்டச்சத்து நிறைந்த உணவு, சம உணவு என்பன ஒவ்வொரு மனிதனுக்கும், அவனது உடல் இயக்கத்திற்கு அத்தியாவசியமானவை; தவிர்க்க முடியாதவை. உணவுப் பற்றாக்குறை நிலவும் போதும், சம உணவை எப்படி ஆக்குவது, எங்கிருந்து பெறுவது என்பன தெரியாத, அறியாமை நிலவும் போதும் ஊட்டச்சத்துக் குறைபாடு தலைதூக்குகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை ஊட்டச்சத்துக் குறைபாடு தாக்குவதற்கு மேலே குறிப்பிட்ட இரண்டு காரணிகளும் ஏதுவாகின்றன. எனினும் எமது பிரதேசத்திலேயே கிடைக்கக்கூடிய, உற்பத்தி செய்யக்



ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிப்புற்ற குழந்தை

கூடிய சத்துணவுகளைப் பற்றிய அறிவில்லாமையும், எங்கள் பாரம்பரிய உணவுப் பழக்கங்களைப் பேணுவதில் அக்கறை காட்டாமையும் உட்டச்சத்துக் குறைபாட்டுப் பிரச்சினைக்கு அதிகளவில் பங்களிக்கிகிறது என்றே கூறலாம்.

போர்க்காலச் சூழ்நிலையில், உணவுப் பற்றாக்குறை உண்டாவது இயல்பு. வெளியில் இருந்து வரும் உணவில் இருந்து ஊட்டச்சத்தைப் பெறுவதற்கும், சம உணவைத் தேடுவதற்கும் காத்திருக்கக் கூடாது. எமது பிரதேசத்தில் விளையும் தானியங்கள், மரக்கறிகள், இலைவகைகள், கடலுணவுகளைக் கொண்டு, ஊட்டம் செறிந்த சம உணவுகளைத் தயாரிக்க பழகிக் கொள்ள வேண்டும். எமது முன்னோரின் உணவுப் பழக்கங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்தால், ஊட்டச்சத்துக் குறைவினால் உண்டாகக் கூடிய பாதிப்பைத் தடுக்கலாம். ■■

www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

டன் கூறிக் கற்பிக்கும் ஆசிரியர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறான விடயங்களும் உரையாடலின் போது இம்மாணவர்களால் தெரிவிக்கப்பட்டன.

தாங்கள் வெளிநாடு சென்று கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தால், அங்கு பெற்ற மேலதிக கல்வியுடன் தாய்நாட்டிற்கே திரும்பிவந்து சேவை செய்ய விரும்புவதாக இந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சிக்குச் சென்று ஹாட்லிக் கல்லூரி மாணவர்களான த.தயாபரன், ந.கணநாதன் ஆகியோரை அவர்களை அவர்களின் வீடுகளில் சந்தித்தோம். செல்வன் தயாபரனோடு உரையாடுகையில், ஒவ்வொரு நாளும் தான் படித்த பாடங்களை அந்தந்த நாளிலேயே மீட்டுப் பார்க்கும் பழக்கம் தம்மிடமுள்ளதாகவும் இதுவே தாம் சிறப்பு சித்தி யெய்த காரணமெனவும் கூறினார்.

**செல்வன் ந. கணநாதன் சொல்லும்போது,**

தனது பாடசாலை தொடர்ந்து நடைபெறாத காரணத்தினால் தான் தனியார் கல்வி நிலையத்திலேயே கல்வி கற்றதாகவும் தெரிவித்தார்.

அடுத்ததாக மீசாலைக்குச் சென்று செல்வி சுதா தாமோதரம்பிள்ளையைச் சந்தித்தோம். இவர் பல நூல்களையும் வாசிக்கும் பழக்கமுள்ளவர். இசைத்துறையில் நாட்டமுள்ளவர். தென்மராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்துடன் இணைந்து 'தியாகதீபம்' என்ற நிகழ்ச்சியை சென்ற ஆண்டு நடாத்தியுள்ளார். "ஒரு பாடத்தையோ, புத்தகத்தையோ படிப்பதால் மட்டும் பெரியளவில் பலன் கிட்டப்போவதில்லை. எனது ஆற்றலை வேறு வகைகளிலும் பயன்படுத்தி வருகிறேன்." என்று கூறும் இவர்,

"தமிழ் மக்களின் மன உறுதியைக் குலைத்து எதிர்கால கல்வி வளத்தைச் சிதைத்துவிடலாம் என எதிரி எண்ணுகிறான். அவனின் எண்ணம் தவறானது. எந்த இடர்பாட்டையும் கடந்து வளரக்கூடிய ஆற்றல் எம்மிடமுண்டு." என்று குறிப்பிட்டார்.

**(தமிழீழத்திலிருந்து வெளிவரும் இளையோர் திங்கள் இதழான 'சாளரம்' இல் இருந்து)**




## கண்காட்சி

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை புகைப்படங்களால் தொகுத்து கண்காட்சி நடாத்தி வருகின்றனர். இதையே மேலேயுள்ள புகைப்படத்தில் காண்கிறீர்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# கருவறை

**சிறுகதை**

**- அ. மலரோன் -**

என்னைப் பற்றி முதலில் உங்களுக்குக் கொஞ்சம் அறிமுகம் செய்யிறன். நேற்று வடிவான ஒரு செடியில் பூத்திருந்தன். இப்ப வாடிப்போன மலராய் என்ர வாழ்வு முடியிற நேரத்தில, என்ர கடந்தகால அனுபவங்களைப் பற்றியும் நான் பிறந்து வளர்ந்த இந்த மண்ணைப்பற்றியும் உங்களுக்குக் கொஞ்சம் சொல்ல விரும்பிறன்.

என்ர வாழ்க்கையோ கொஞ்சக்கால வாழ்க்கை. ஆனால் என்ர தாயாரான செடி, இந்த மண்ணில பிறந்து சில வருசங்கள் ஆகிவிட்டுது. அவள் சொன்னதாலதான் மண்ணின்ர பெருமையையும், எங்கட தமிழ்மொழியின்ர செழுமையையும் என்னால விளங்க முடிஞ்சுது.

முந்தநாள் நானொரு மொட்டாக இருக்கேக்க எங்கட தெருவால பெரிய இசை முழக்கத்தோடையும், மிடுக்கான அணி வகுப்போடையும் கொஞ்ச ஆக்கள், கையில ஆயுதங்களோடையும் போய்க்கொண்டிருந்தினம். அவையளுக்குப் பின்னால பேழையொண்டை ஏந்திக் கொண்டு ஒரு வாகனமும் போய்க்கொண்டிருந்திச்சுது. அந்த வாகனத்தைச் சுத்திப் பெரிய சனக்கூட்டமும் போய்க்கொண்டிருந்திச்சு. அதுல போன எல்லாச் சனத்தின்ர முகத்திலையும் சோகம் அப்பிக் கிடந்திச்சு. இந்த நிகழ்வின்ர அர்த்தம் எனக்கு விளங்காததால என்ர அம்மாட்ட விசாரிச்சன். அவளும் சோகமாக விக்கித்துக் கொண்டே "இந்த மண்ணின்ர விடுதலைக்காகவும் எங்கட சுதந்திரத்திற்காகவும் போர்க்களத்தில வீரத்தோட போராடி வீரச்சாவடைஞ்ச ஒரு வீரன்ர புகழுடம்பு, மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அவனுக்குள்ள மரியாதையோட எடுத்துச் செல்லப்படுது.'' எண்டு சொன்னாள்.

"யாரிட்ட இருந்தம்மா இந்த மண்ணை விடுவிக்கவேணும்? ஆரம்மா எங்களின்ர மக்களின்ர சுதந்திரத்தைப் பறிச்சது?" என்ர சந்தேகங்களை அடுக்காக அம்மாட்டக் கேட்டன். அதுக்கு அவள் "இந்த மண் ஆதியில இருந்தே தமிழர் வாழுற பொலிவான மண். பல தமிழ் அரசன்மார் இதை நல்லா ஆண்டதோட தாய்மொழியான தமிழையும் பாதுகாத்து வளத்தார்கள். பிறகு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எண்ட வெளிநாட்டுக்காரங்கள் தொடர்ச்சியா இந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டாங்கள். கடைசியிலை ஆங்கிலேயர் இங்கையிருந்து போகேக்கை ஆட்சிப் பொறுப்பை, பக்கத்து நாட்டைச் சேர்ந்த சிங்களவரிட்டைக் கொடுத்தாங்கள். வெள்ளைக்காரங்கள் வரமுதல் பக்கத்து நாட்டை ஆண்ட சிங்களவர், அவர்கள்கள் போன பிறகு இந்த நாட்டையும், அதோட எங்கடை தாய்மொழியான தமிழையும் சிதைச்சு, சிங்களத்தை இங்கே புகுத்தத் தொடங்கினார்கள். இந்த அடாவடித்தனங்களைப் பொறுக்க ஏலாமல், எங்கடை சனத்தின்ரை இளைய தலைமுறை இருபது வருசங்களாக ஆயுதப்போரை நடத்தி வருகிது. அப்படியான ஒரு சண்டையிலை வீரச்சாவடைந்த வீரனொருவனின்ரை உடம்புதான் இப்ப கொண்டு போகப்படுது." எண்டு ஒரு கதையே எனக்குச் சொன்னாள்.

என்ரை அம்மாவுக்கு எப்படி பழைய வரலாறெல்லாம் தெரியுமெண்டு உங்களுக்குச் சந்தேகம் வருகிதா? எனக்கும் அப்படிச் சந்தேகம் வந்தது. அதை அம்மாட்டைக் கேட்டபோது, தன்னைத் தாங்கி நிக்கிற மண்மாதா தனக்குச் சொன்னதாகச் சொன்னாள்.

அம்மா சொன்ன அந்த நேரத்திலை இருந்து எனக்கும் சிங்கள அடாவடிக்கு எதிராக போராட வேணுமெண்ட ஆசை ஏற்பட்டுது. நான் இப்படிச் சொல்றதாலை உங்களுக்கு சிரிப்பு வரலாம். நானும் இந்த மண்ணிலைதானே பிறந்தன். எனக்கும் போராடுகிற ஆசை வருந்தானே. ஆனால் நான் என்ன செய்வேன். எனக்கு உங்களைப்போலை கையும், காலும் இல்லை. எப்பிடி நான் போர்க்களம் போய்ப் போர் செய்ய ஏலும்? என்ரை உணர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வுகளை அழுகையோடை அம்மாட்டைச் சொன்னன். அதுக்கு அவள், "மகனே! உன்னாலை போர் செய்ய ஏலாது எண்டுறது உண்மை தான். ஆனால் எங்கடை குலத் தவரான எத்தனையோ மலர்கள் களத்தில் வீரச்சாவடைஞ்ச மாவீரருக்குக் காணிக்கையாகி, அவையளின்ரை கல்லறைகளுக்கு அஞ்சலி செய்யினம். எனக்கெண்டா அந்தப் பாக்கியங்கூட கிடைக்கேல்லை. எண்டாலும் உன்ரை சகோதரங்களான என்ரை பிள்ளையள் பலரை அஞ்சலிக்கு நான் அனுப்பிவிட்டன். அதாலை பெருமையும் திருப்தியும் அடையிறன்." எண்டு சொன்னாள்.

எனக்கும் "கெதியிலை மலராகி, மாவீரர் கல்லறைக்கு அஞ்சலியாய்ச் செல்லவேணும்." எண்ட துடிப்பு ஏற்பட்டுது. அம்மாட்டை அதுக்கு அனுமதி கேட்டன். அதுக்கு அவள் "நாளைக்குக் காலையிலை வழமை போல மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்து இங்கை யாராவது வருவினம். அவையள் அஞ்சலிக்கெண்டு மலர்களைக் கொய்துகொண்டு போவினம். அந்த நேரம் நீயும் புதுமலராய்ப் பூத்திருப்பாய். உன்னையும் அவையள் கொண்டு போவினம். இங்கை இருந்து வீணாக் கருகி நிலத்துல விழுறதைக் காட்டிலும், இந்தத் தேசத்தின்ரை விடுதலைக்காய் தன்னுயிரை விட்ட மாவீரன் ஒருவன்ரை காலடியிலை சேருகிறதே மேல்." எண்டு உணர்ச்சியோடு சொன்னாள்.

நேற்றுக் காலையிலை புதிசாப் பூத்த பொலிவோட கல்லறை செல்லுற கனவையும் சுமந்த காரணத்தால இரட்டிப்புப் பொலிவோட காணப்பட்டன். அந்த நேரம் என்ரை சகோதரங்களும் புதிசாப் பூத்திருந்திச்சினம். அவையள் என்னோடை சேர்ந்து தாங்களும் வருவமெண்டு சொல்லிக் கொண்டிருந்தீச்சினம். முந்த நாள் எனக்கு அம்மா சொன்ன எல்லாத்தையும் அவையளும் கேட்டுக் கொண்டுதான் இருந்தவை.

கொஞ்ச நேரத்தால கூடையோடை வந்த ஒருவர், என்னையும், என்ரை சகோதரங்களையும் கொய்து தன்ரை

**இவை கல்லறைகளல்ல கருவறைகள்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கூடையிலை போட்டார். நாங்களும் அம்மாட்டைச் சொல்லிப் போட்டு சந்தோஷத்தோடை போனோம். எங்களைக் கொண்டுபோன அந்த மனிதர், தண்ணியில நல்லாக் குளிப் பாட்டினார். பிறகு எங்கள் ஒவ்வொருத்தராக மாவீரரின் காலடிகளிலை இருத்தினார்.

நான் உணர்ச்சி பொங்க ஒரு மாவீரரின் கல்லறையில அஞ்சலி செய்து கொண்டிருந்த நேரம், அந்தக் கல்லறைக்குப் பக்கத்திலை சில பேர் வந்து கொஞ்ச நேரம் தலையைக் குனிஞ்சு மௌனமாய் நிண்டினம். பிறகு அவையள் எல்லாரும் ஒருமித்த குரலில் "உங்கள் கனவை நாங்கள் நனவாக்குவோம். இறுதி மூச்சுவரைக்கும் உங்களின் பணியைத் தொடருவோம். இண்டைக்கே அதுக்காய் ஆயுதம் ஏந்துவோம்." எண்டுவிட்டுப் போச்சினம். அந்தக் கணம் எனக்கு ஒரு உண்மை விளங்கிச்சுது. நாங்கள் அஞ்சலி செய்து கொண்டிருக்கிறது கல்லறைகளுக்கில்லை, கருவறைகளுக்கு. ஏனெண்டா, அதுகள் புதுசு புதுசா போராளிகளை உருவாக்குது. உடனே அம்மாட்ட ஓடிப்போய்ச் சொல்லவேணும் போல இருந்திச்சுது. ஆனால் என்ரை கடமையை முடிக்க வேண்டி இருந்ததால நிண்டிட்டன்.

எங்களை இங்கை கூட்டி வந்த மனிதர், இண்டைக்குக் காலையிலை வாடிக்கிடந்த எங்களை எடுத்துப்போட்டு, எங்களைப்போல புதிய மலர்களை அஞ்சலிக்கு இருத்தினார். என்ர தாய்நாட்டுக்கு என்னால முடிஞ்ச கடமையைச் செய்து முடித்ததால, இப்ப நான் நிறைவா இருக்கிறேன். உங்கட தாய்நாட்டுக்கு உங்களால் முடிஞ்ச கடமையைச் செய்துபோட்டீங்களா? நீங்களும் என்னைப்போல நிறைவா இருக்கிறீங்களா?

என்ரை கடைசி ஆசையை உங்களிட்டைச் சொல்லுறன். என்ரை தாயிட்டை "உங்கட பிள்ளையள் கல்லறையளுக்கில்லை, கருவறையளுக்குத் தான் அஞ்சலி செய்யினம் எண்டு சொல்லுங்கோ."

■■



**அடிப்படை வசதிகள் கூட இன்றி இயங்கும் ஒரு வைத்திய நிலையம் இது.**

**சிறிலங்கா அரசால் விதிக்கப்பட்ட மருந்துத் தடை, மருந்து உபகரணங்களுக்குத் தடை போன்ற வற்றால் எமது மக்கள் மிகவும் அல்லலுறுகின்றனர்.**

**இந்தத் துயரை ஒரு கவிதையாக எழுதி அனுப்பி வையுங்கள் சிறந்த கவிதை எரிமலை இதழில் பிரசுரிக்கப்படும்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சுடரோங்கு கதிர் வீச்சு
எமை வந்தும் சுடுக.

அவனுக்கு மட்டுமல்ல
எங்களுக்கும் தான்
தாய் மண்.

அடிமைப்பட்ட
எமக்காகவும் தான்
அவன் ஒளிச்சுடராய் இருந்தான்.

இவன் காதலால்
பூமித்தாய் செழித்தாள்.

புதிய வலிமை, திடம்
தளரா மனவுறுதி
இவைதான்
இவன் விட்டுச் சென்றவை.

இவன் தளிராய் இருந்தபோது
தாய் காட்டிய நிலவு
முற்றம்
அவன் மேனி தழுவிய தென்றல்
சிறைப்பட்டா இதுநாளும் இருக்கிறது என
அவன் கேட்கத் தொடங்கினான்.

தாயின் விழி தழுவு சோகம்
விளையாட்டல்லவே
பெற்றவளுக்காய்
பிள்ளை இவன் எழுந்தான்

காற்றாக
புயலாக
நெருப்பாக
அலையாக எழுந்தது கதையல்ல
அது அவன் வாழ்க்கை.

போரினாலும்
தியாகத்தினாலும்
வலிய நெஞ்சினாலும்
வாழ்ந்து காட்டும் எம்பூமி

மண் வாழ்வதற்காய்
போராடிப்போன புதல்வனுக்கு
புயல் போர்த்தும் தாய்

இவர்களே
எழுகின்ற ஞாயிற்றின்
சுடரோங்கு கதிர்வீச்சு

சுடரோங்கு கதிர் வீச்சு
எமை வந்தும் சுடுக!

- சுபா -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழ் மன்னர்களும் யாழ்ப்பாணக் கோட்டையும்

இலங்கையின் முதல் வரலாற்றுப் பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சத்தில் நாகதீபம் எனவும், தமிழ் இலக்கியங்களில் ஒன்றான மணிமேகலையில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்ட இன்றைய யாழ்ப்பாணப் பிராந்தியத்திற்கு தொன்மையான, தொடர்ச்சி குன்றாத பாரம்பரிய வரலாறு உண்டு. வரலாற்றுத் தொடக்க காலத்தில் இப்பிராந்தியத்தில் வாழ்ந்த மக்கள் தமிழ் மொழியைப் பேசினர் என்பதை ஆனைக்கோட்டை, பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இருந்தும் இலங்கையின் ஏனைய பாகங்களில் அரச ஆதரவில் மேற்கொள்ளப்பட்டது போன்ற தொல்லியல் ஆய்வுகள் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படவில்லை. தனிப்பட்ட சிலரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் கிடைத்த தொல்லியல் சான்றுகள் கூட சரிவரப் பாதுகாக்கப்படாமை முக்கிய குறைபாடாகும்.

13ம் நூற்றாண்டில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட சுதந்திரத் தமிழரசொன்று யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு உதயமானது. இவ்வரசின் ஆதிக்கம் யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி வரை பரந்திருந்தது. இக்காலத்தில் யாப்பகுவ, குருநாகல், கம்பளை அரசுகள் தென்னிலங்கையில் இருந்த போதும், அவைகளைக் காட்டிலும் யாழ்ப்பாண அரசு படைபலத்திலும், பொருள் வளத்திலும் மேலோங்கிக் காணப்பட்டதாக நிகாயசங்கிரகய, இராஜவலிய முதலான நூல்கள் கூறுகின்றன. கி.பி. 1358ல் கம்பளை இராச்சியத்தில் ஏற்பட்ட கலகத்தில் மூன்றாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண மன்னனின் உதவியை நாடினான். இதன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பொருட்டு அம்மன்னன் கம்பளையைச் சேர்ந்த சில பகுதிகளை யாழ்ப்பாண மன்னனுக்குக் கொடுத்தான். கோட்டகம என்ற இடத்தில் கிடைத்த 14ம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டு ஒன்று, யாழ்ப்பாண மன்னனின் படைகள் மலைநாடு புகுந்து அங்கு ஆட்சியிலிருந்த சிங்கள அரசனொருவனைத் தோற்கடித்தது பற்றிக் கூறுகிறது. இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில், இராஜவலிய என்ற சிங்கள நூல் மலைநாடு, கரையோரம் உட்பட ஒன்பது துறைமுகங்களில் இருந்து யாழ்ப்பாண மன்னர்கள் திறை பெற்றதாக கூறுகிறது. பேராசிரியர் கே.எம்.டி. சில்வா என்ற அறிஞர் தென்னிந்தியப் படையெடுப்புகள், யாழ்ப்பாண அரசிற்கு அச்சுறுத்தலாக அமையாவிட்டால் தென்னிலங்கை முழுவதும் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கத்திற்குள் வந்திருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு, மத்திய கால இலங்கை வரலாற்றில் சீரும் சிறப்பும் பெற்ற நல்லூர் இராசதானி அமைந்த பிராந்தியத்திற்கு கந்தரோடை, வல்லிபுரம் போன்ற இடங்களைப் போலத் தொன்மையான பாரம்பரிய வரலாறு இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு இப்பகுதியில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறுவதற்கில்லை. இதனால் வரலாற்றாசிரியர்கள் பலரும் மத்திய காலத்தில் இப்பிரதேசம் சிறப்புப் பெற்றதற்கு தமிழ் மன்னர்களின் இராசதானி இந்நகரில் அமைந்ததே காரணம் எனக் கருதுகின்றனர். ஆனால் சமீபத்தில் நல்லூரிற் கிடைத்த 'லஷ்மி' நாணயமும், இதற்குச் சற்று தென்மேற்கே பூம்புகார், மணியந்தோட்டம் ஆகிய இடங்களிற் கண்டுபிடித்த ஆதிக்குடியிருப்புகளுக்குரிய சான்றுகளும் கந்தரோடை, வல்லிபுரம் போன்ற நகரங்களுக்கு உள்ளவை போன்ற பாரம்பரிய வரலாறு நல்லூருக்கும் இருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கின்றன. இதே போல் அந்நியரின் நினைவுச் சின்னமாக உள்ள யாழ்ப்பாணக் கோட்டையும், அதைச் சூழவர உள்ள இடங்களும் வரலாற்றிற் சிறப்புப் பெற்றமைக்கு நல்லூர் இராசதானியின் வீழ்ச்சிக்கு ஏதுவாய் இருந்த போத்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால ஆட்சியுமே காரணம் எனக் கூறப்படுகிறது. இவற்றுட் கோட்டையின் அமைப்பும் அதன் கலைமரபும் நல்லூரில் உள்ள மந்திரி மனை, கற்றோரண வாசல் முதலியனவற்றைப்போல் அன்னியருக்குரியதென்பதில் ஐயமில்லை. ஆனால் இவ்விடத்தில் இக்கோட்டை கட்டப்பட்டமைக்கு அன்னியர்தான் முதலில் காரணமாக இருந்தார்களா அல்லது இவர்களுக்கு முன்னரே தமிழ் மன்னர்களுடைய கோட்டை இவ்விடத்தில் இருந்ததுதான் காரணமா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

இக்கோட்டை அமைந்த சுற்றாடலின் அமைவிடத்தையும், இவ்விடத்துடன் கடல்வழித் தொடர்பு கொள்ளக்கூடிய பண்ணைத்துறை, நாவாந்துறை, அராலித்துறை, ஊர்காவற்துறை, கொழும்புத்துறை போன்ற இடங்களையும் நோக்கும் போது, ஆதிகால வெளிநாட்டு வர்த்தகத்தில் இவ்விடமும் தொடர்பு கொண்டிருந்ததெனக் கூறலாம். கோட்டைப் பகுதியிற் கண்டுபிடிக்கப்பட்ட ரோம நாணயமும், இதற்குச் சற்றுத் தென்மேற்கே வேலணை, மண்கும்பான், சாட்டி போன்ற இடங்களிற் கண்டுபி

## காவல்

**பக்கம் பக்கமாய் இரண்டு காணிகளில் இரண்டு நாய்கள். ஒரு நாய் எப்போதும் துடிப்பாக இருக்கும். இன்னொன்று சோர்ந்து கிடக்கும்.**

**துடிப்புள்ள நாய் தன் காணியில் நுழைந்த மாடுகளைக் குரைத்து விரட்டி அடித்தது. சோர்ந்த நாயின் காணியிலோ பயிர்களை மாடுகள் மேய்ந்து முடித்திருந்தன.**

**ஒரு நாள்**

**இரண்டு காணிகளிலும் பாம்புகள் நுழைந்தன.**

**விழிப்போடிருந்த நாய் பாம்பை துண்டு துண்டாய்க் கடித்துக் குதறியது.**

**தூங்குமுஞ்சியோ பாம்பு தீண்டித் துடிதுடித்துச் செத்துப் போனது.**

**பொது வேலியில் இருந்த காக்கை சொன்னது**

**'இயலான் மண்ணில் அயலான் ஆட்சி.'**

**(காசி ஆனந்தன் கதைகளிலிருந்து)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டிக்கப்பட்ட ஆதிக்குடியிருப்புகள் பற்றிய சான்றுகளும் ரோம நாணயங்களும், ரோம மட்பாண்டங்களும், அரேபிய, கிரேக்க, சீன மட்பாண்டங்களும் ஆதியில் இவ்விடங்களுடன் தென்னிந்திய, கிரேக்க, ரோம, அரேபிய, சீனத் தொடர்புகள் இருந்தமைக்குச் சான்றாகும்.

இவ்விடங்கள் பத்தாம் நூற்றாண்டிற் சோழர் ஆட்சியுடன் மேலும் முக்கிய வர்த்தக நடவடிக்கைப் பிரதேசமாக விளங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. தமிழ் நாட்டிற்குக் கிட்டவுள்ள இவ்விடங்களைச் சோழர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம், மேற்கிலிருந்து ஏற்பட்ட அராபியரது வர்த்தக எழுச்சியைத் தடுக்கவும், இலங்கையின் பெருநிலப்பகுதியிலிருந்து ஏற்பட்ட சிங்கள மன்னர்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்தவும், கிழக்கே தென்கிழக்காசிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தவும் வாய்ப்பாக இருந்திருக்கும். இதை உறுதிப்படுத்தக்கூடிய அதிக சான்றுகள் யாழ்ப்பாணத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படாவிட்டாலும், இங்கு பரவலாக கண்டுபிடிக்கப்பட்ட சோழர்கால நாணயங்களும், சோழரை நினைவுபடுத்தும் செம்பியன்பற்று, வளவர் கோன் பள்ளம், கங்கை கொண்டான் போன்ற இடப்பெயர்களும் கமால் வீதி, நாரந்தனை போன்ற இடங்களிற் கிடைத்த இவர்கள் காலச் சிற்பங்களும் இதை ஓரளவு உறுதிப்படுத்துகின்றன. இவற்றுட் கோட்டை அமைந்துள்ள இடம் சோழரின் முக்கிய வர்த்தகத் துறைமுகமாக அல்லது அவர்களின் பாதுகாப்பு மையமாக இருந்ததெனக் கருத இடமுண்டு.

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட யாழ்ப்பாண மன்னர் கால ஆலயங்களையும், அரண்மனைகளையும் கொண்டு இவ்விடத்திற் புதிய கோட்டை கட்டப்பட்டாலும், அவை அனைத்தும் யாழ்ப்பாண மன்னர்கள் காலத்துக்குரியவையெனக் கூறமுடியாது. இக்கோட்டையின் மேற்குப்புறப் பகுதியில் பழமையான கட்டிடங்களுக்குரிய கற்றூண்கள் காணப்படுகின்றன. அவற்றுட் சில 10ம் நூற்றாண்டுக்குரிய கிரந்த எழுத்துக்களையும் கொண்டுள்ளன. இவை பிற்பட்ட பல்லவர் அல்லது முற்பட்ட சோழர் காலத்திற்குரியவையாகும். இக்கற்களை இன்னொரு இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டவையெனக் கருத இடமிருப்பினும், சில வேளை இவ்விடத்தில் இருந்த ஒரு கட்டிடத்தின் கற்களாகவும் இவற்றைக் கொள்ளலாம். இக்கோட்டையில் உள்ள இன்னொரு கல்வெட்டு 11ம் நூற்றாண்டில் இராசேந்திர சோழன் நல்லூரில் அமைத்த ஆலயம் ஒன்றுக்குத் தானம் அளித்தது பற்றிக் கூறுகிறது. இது தற்போதைய நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு முற்பட்டதான பழைய ஆலயத்தையோ அல்லது சோழர் காலத்தில் இங்கிருந்த இன்னொரு ஆலயத்தையோ குறித்திருக்கலாம் எனப் பலரும் கருதுகின்றனர். ஆனால் அக்காலத்தில் நல்லூர் என்ற பெயர் தற்போதைய நல்லூருக்கு இருந்

## கிராமப் பாசறைகள் அமைத்து மக்களோடு புலிகள்.

பண்டத்தரிப்பில் உள்ள பிரான்பற்று, நிச்சாமம் என்ற இரு கிராமங்களில் விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர் கிராமப் பாசறை ஒன்றை அமைத்து அக்கிராம மக்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களோடு உரையாடி, அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்தனர்.

அந்தக் கிராம மக்களின் வளங்களை அறிந்து, அவற்றை முழுமையாக பயன்படுத்தி எவ்வாறு உச்சப்பயன்களைப் பெறுவது என்பது பற்றி பூரண விளக்கங்களை அம்மக்களுக்கு அளித்தனர். வீட்டுத் தோட்ட வேளாண்மை பற்றியும், பொருளாதாரத்தைப் பற்றியும், நிறை உணவு, சுகாதாரம், விளையாட்டு, மருத்துவம், கலை போன்ற இன்னோரன்ன விடயங்கள் குறித்தும் அம்மக்களோடு உரையாடினர். வீடு வீடாகச் சென்று, அம்மக்களோடு கலந்திருந்து உணவு அருந்தி மகிழ்ந்தனர். அவர்களோடு சேர்ந்து வேலைகள் புரிந்தனர். மூன்று நாட்கள் தொடர்ச்சியாக போராட்டத்தைப் பற்றி விளக்கும் கண்காட்சி ஒன்றையும் நடாத்தினர். இறுதியாக அந்த மக்களோடு இணைந்து கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றையும் நடாத்தினர். இதுபோன்ற கிராமப் பாசறைகளை தமிழீழத்தின் அனைத்துக் கிராமங்களிலும் அமைக்க இருக்கிறார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


**ஓவியர் தயாவின் அண்மைக்கால கேலிச்சித்திரங்களிலிருந்து..**




குருடன் சென்ற வழியில் நடக்கும் கண்தெரியாதவனாக இருக்கவே டி.பி.விஜயதுங்க விரும்புவது எதிர்பார்க்காத ஒன்றல்ல.



செயலிழந்து போன இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பிரேமதாசாவின் மரணத்தைப் பயன்படுத்தி தான் உயிரோடு இருக்கும் போது உயிர்கொடுக்க முனைகிறார் ஜே.ஆர்.

தத்தற்கு ஆதாரமில்லை. இதே வேளை கோட்டை அமைந்துள்ள இடம் யாழ்ப்பாணம் எனக் குறிக்கப்பட்டதற்கும் ஆதாரமில்லை. இதனால் மேற்கூறப்பட்ட சோழர் கல்வெட்டில் வரும் நல்லூர் யாழ்ப்பாணத்தின் முன்னோடிப் பெயரா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. சோழர் ஆட்சியில் நல்லூர் என்ற பெயர் தமிழ் நாட்டின் பல இடங்களிற்கு இடப்பட்டதற்கு ஆதாரமுண்டு. இதேபோல் இலங்கையில் அவர்களின் ஆட்சிக்குட்பட்ட திருகோணமலை, பூநகரி, களுத்துறை, குருநாகல் போன்ற இடங்களிலும் இப்பெயர்கள் உள்ளன. இவ்விடங்கள் பெரும்பாலும் கடற்கரையை அண்டிய துறைமுகங்களிலும், நகரங்களிலும் இருந்ததுடன் இவற்றில் முக்கிய வர்த்தக, பண்பாட்டு நடவடிக்கைகள் இருந்தமைக்கான ஆதாரங்களும் உள்ளன. இவற்றுள் திருகோணமலையிலும், பூநகரியிலும் இவர்கள் கால ஆலயங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அப்படியாயின், கோட்டையில் இருந்த சோழக் கல்வெட்டை முன்பு இங்கிருந்த கல்வெட்டாகக் கருத இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்கு இன்னொரு ஆதாரத்தை இங்கு எடுத்துக்காட்டலாம். இக்கோட்டையின் வடக்காக உள்ள நிலப்பகுதி இன்று 'ஐநூற்றுவன் வளவு' என்பது சோழர் காலத்துக்குரிய முக்கிய வணிகக் கணங்களில் ஒன்றாகும். இவ் வணிகக் கணங்களே சோழர் காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் மட்டுமன்றிப் பல ஆலயங்களைக் கட்டுவதற்கும், நகரங்களை அமைப்பதற்கும் காரணமாக இருந்தன. குறிப்பாக, பொலநறுவையிலும், பதவியாவிலும் உள்ள சில ஆலயங்களின் தோற்றம் வணிகக் கணங்களோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. கோட்டையில் இருந்த சோழர் கல்வெட்டில், ஆலயத்திற்குத் தானம் கொடுத்தவனாக "சாத்தன்" என்பவன் குறிப்பிடப்பட்டுள்ளான். சாத்தன் என்றால் வியாபாரிகள் கூட்டம் என்று பொருள்படும். பல சோழக் கல்வெட்டுக்களிலே தானம் அளித்தவன் பெயர்களில் சாத்தன் என்ற

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பெயர் சிறப்பாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே சோழர் கால ஆலயம் பற்றிய கல்வெட்டும், அவர்கால வணிகக்கணம் பற்றிய பெயரும் யாழ்ப்பாணக் கோட்டை அமைந்த பிரதேசத்துடன் தொடர்புடையனவாக இருப்பதினால் இக்கல்வெட்டில் வரும் ஆலயம் இங்கு இருந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு. இச்சான்றுகளை நோக்கும் போது யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தி மன்னர் காலத்திற்கு முன்னரே சோழர் காலத்திலேயே தற்போதைய கோட்டை அமைந்துள்ள பிரதேசம் முக்கிய வர்த்தக பண்பாட்டு மையமாக விளங்கியதெனக் கூறலாம். இவ்விடமே பிற்காலத்தில் யாழ்ப்பாண மன்னர்களின் முக்கிய கோட்டையாக விளங்கியிருக்க வேண்டும்.

ஆரியச் சக்கரவர்த்தி மன்னர் கால அரண்மனைகளையும், ஆலயங்களையும் விபரித்துக் கூறும் 'யாழ்ப்பாண வைபவமாலை' அவர்கள் காலக் கோட்டை பற்றியும் கூறுகிறது. செண்பகப்பெருமாள் படையெடுப்புப் பற்றிக் கூறும் 'இராஜவலிய' என்ற சிங்கள நூல், யாழ்ப்பாணத்தில் இவன் அமைத்த காவல் அரண், கோட்டை என்பன பற்றியும் கூறுகிறது. இச்சான்றுகள் போர்த்துக்கேயருக்கு முன்னரே தமிழ் மன்னர் காலக் கோட்டையொன்று இருந்ததென்பதை ஏற்றுக் கொண்டால், அது கடற்கரையை அண்டிய பகுதியாகவே இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஆரியச் சக்கரவர்த்தி மன்னன் ஒருவனின் வெற்றி பற்றிக் கூறும் "கோட்டகம" சாசனத்தில் 'பொங்கொலி நீர் சிங்கை நகர்' கூற்று இம்மன்னர்கால அரசிருக்கை அல்லது இராசதானியின் கட்டிடம் ஒன்று கடற்கரையை அண்டியிருக்கலாம் என்பதையும் உணர்த்துவதாகக் கருத்தில் எடுத்துக் கொள்ள இடமுண்டு.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையைத் தவிர, யாழ்ப்பாணத்தின் கடற்கரையை அண்டிய ஏனைய பகுதியில் யாழ்ப்பாண மன்னர் காலத் தொல்பொருட் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் இடையிலான போராட்டங்கள் பல கொழும்புத்துறைக்கும், பண்ணைத்துறைக்கும் இடையிலே நடந்ததாகத் தெரிகிறது. இவற்றை நோக்கும் போது, யாழ்ப்பாண மன்னர் காலக் கோட்டை தற்போதைய கோட்டை இருக்கும் பகுதியில் இருந்ததெனக் கூறலாம். அக்காலத்தில் இக்கோட்டை மிகப் பெரியதாக இருந்ததாக கூற முடியாவிட்டாலும், பெருமளவிற்கு மண்ணையும், கல்லையும் கொண்டு கட்டப்பட்டிருந்தது எனக்கூறலாம். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து ஆலயங்களை இடித்து, அதன் அருகே புதிய கத்தோலிக்க தேவாலயங்களைக் கட்டிய போதிலும், ஆரம்பத்தில் இவை களிமண் கொண்டு கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இதேபோல் யாழ்ப்பாண மன்னர் காலக் கோட்டையை இடித்து அல்லது அதில் சில மாற்றங்களைச் செய்து போர்த்துக்கேயர் தமது கோட்டையாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். இதையே பின்னர் வந்த ஒல்லாந்தர் தற்போதைய நிலையில் கட்டி முடித்தனர். கோட்டையைச் சரிவர ஆராய்ந்தால், இக்கோட்டைக்கும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் இடையிலான தொடர்பு மேலும் துலக்கம் பெறும்.

ப. புஷ்பரத்தினம்
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்/'பல்கலைக்கழகம்.

## உற்பத்தி எழுச்சி வாரம்

கடற்புலிகளின் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கடந்த மே மாதத்தில் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகளை நடாத்தியது. உள்ளூரில் மூலப்பொருட்களைக் கொண்டு தரமான உற்பத்திகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் ஏற்படுத்துவதோடு, கவனிப்பாரற்று, அபிவிருத்தியற்று, எதிரியால் திட்டமிடப்பட்டு அழிந்துபோகும் நிலையில் இருந்த எமது வளங்களைக் காத்து, பயன்பெறும் வண்ணமாக இவ்வாறான எழுச்சிவாரப் போட்டிகள் அமைகின்றன. இந்த வகையில் கிடுகு பின்னல், தும்புத்தடி, விளக்குமாறு, குட்டான் தயாரித்தல், கயிறு திரித்தல், புதிய உணவு தயாரித்தல், ஓலை பின்னல், பாய்மரம் ஓட்டுதல், நிலம் கொத்துதல், கட்டுமரம் வலித்தல், துலாமிதித்தல், வண்டிச்சவாரி ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டன. இப்போட்டிகளில் ஏராளமானோர் பங்கு பற்றி வெற்றியீட்டினர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# நடனமும் உளவியலும்

சபா. ஜெயராசா

உள இசைவு, மனவெழுச்சி இசைவு, சமூக இசைவு ஆகியவை உடல் இசைவுடன் இணைந்தவை. உடலியக்க இசைவு கல்வியியலிலே விரிவாக விளக்கப்படுகின்றது. புலன் உறுப்புக்களின் ஆற்றல், உள்ளார்ந்த சுரப்பிகளின் தொழிற்பாடு, நரம்புத் தொகுதியின் தொழிற்பாடு குருதிச்சுற்றோட்டத்தின் திறன், எலும்பு, தசைநார்கள் என்பவற்றின் இயல்புகளுடன் உடலிசைவு தொடர்புடையதாகும். நடனக் கல்வி மேற்கூறிய உடலியக்க இசைவுகளை வளம்படுத்தும் வகையிலே வடிவமைக்கப்படுகின்றது.

நடனக்கல்வியிலே கலைப் பண்புகளும், உடலியக்கப் பண்புகளும் ஒன்றிணைக்கப்படுகின்றன. உடற் கட்டமைப்பு வழியான "உரையாடலை" நடனம் ஏற்படுத்துகின்றது. இந்த உரையாடலிலே தசைநார்களின் பலம் பங்கேற்கின்றது. உடல்வலுவின் பிரயோகம் சம்பந்தப்படுகின்றது. விரைந்த அசைவுகளும், தழுவும் அசைவுகளும் சம்பந்தப்படுகின்றன.

இவற்றின் வழியாக நடனம் "சமநிலைகளை" உருவாக்குகின்றது. சமநிலைகள் இரண்டு வகைப்படும். ஆடும் பொழுதும், அசையும் பொழுதும் ஏற்படுத்தப்படும் சமநிலை ''இயக்கச் சமநிலை"யாகும். நடராஜத்தாண்டவத்தின் பொழுது, ஒற்றைக் காலில் நிற்கும் சமநிலையை "நிலையியற் சமநிலை"க்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மருத்துவக் கல்விக் கண்ணோட்டத்தில் நடனக் கல்வியை ஆராய்ந்தவர்கள், நடனத்தின் வாயிலாக உடலுக்குரிய ஒட்சிசன் வழங்கல், அழகியல் உணர்வு நிகழும் சம காலத்தில் அதிகரிக்கின்றதென்றும், இருதயத்தின் வினைத்திறன் மேம்படுகின்றதென்றும், இவற்றின் வழியாக மூளையின் கற்கும் திறன், ஞாபகத்திறன், முதலியவை விருத்தியடைகின்றதென்றும் குறிப்பிடுகின்றனர். மன நலமுடையோர் தமக்கும், பிறருக்கும் பயனுடையோராகின்றனர். வாழ்க்கைப் பிரச்சினைகளை வினையாற்றலுடனும், ஆக்கபூர்வமாகவும் அணுகுவதற்கு மனநலம் துணைசெய்கின்றது. உடலியல் வரையறைகளை மீறிக்கற்றல் நடைபெற முடியாதென்பது கல்வியியலிலே வற்புறுத்தப்படுகின்றது.

உடல் சார்ந்த நெருக்குவாரங்களைச் சமூகம் அங்கீகரிக்கத் தக்க வகையிலே வெளிப்படுத்த முடியாதவிடத்து உளவியற் பிறழ்வுகள் ஏற்படுகின்றன. மனவெழுச்சிகளை உடலியக்கங்களுடன் இணைத்து வெளியிடும் சமூக அங்கீகாரத்தின் வழியாக நடனம் கவின் கலையாக உளவியல் நோக்கிலே வளர்ச்சியடைகின்றது.

சிக்கலான ஓர் உடலியக்கத் திறனைச் சிறுசிறு அலகுகளாக்கித் தொடுக்கும் நடத்தைப் பண்புகள் நடனக் கல்வியிலே முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு ஆற்றல்களைக் கற்பதற்குரிய பயிற்சி இத்தகைய ஏற்பாட்டினாற் பலப்படுத்தப்படுகின்றது.

நடனத்தில் யதார்த்தங்கள் படிமங்களாக மாற்றப்படுகின்றன. மனிதரது தொழிற்பாடுகளிலே ஒழுங்கும், அழகும் ஏற்படுத்தப்படுகின்றது. பொருள் உற்பத்தி முறைமை மாற்றமடைய அதற்கியைந்தவாறு சமூக வாழ்க்கை ஒழுங்கமைக்கப்படும் பொழுது, முன்னைய பொருள் உற்பத்தி முறைமையோடும், சமூக வாழ்க்கையோடும் இணைந்த நடனம் அழிந்துவிடாமல் நிலைபேறு கொள்வதற்குரிய கார

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ணியாக அமைவது யதார்த்தங்கள் படிமங்களாக மாற்றப்பட்ட அழகியற் செயற்பாடாகும்.

இதன் பின்புலத்திலேதான் "நடனத்தின் நித்தியம்" என்ற தொடர் விளக்கப்படுகின்றது. இந்தத் தொடர்பில் இந்திய மரபில் நடனம் தெய்வீகப் பண்புடையதாக மாற்றப்பட்டுள்ளமையை இணைத்து நோக்கப்பட முடியும்.

நடனத்தின் அறிகை சார்ந்த அணுகுமுறைகள் பின்வருமாறு காணப்படும்.

அ) பிரபஞ்சத்தின் இயல்பை விளங்கிக் கொள்ளல்

ஆ) பிரபஞ்சத்தில் மனிதனின் நிலையை நுணுகி நோக்குதல்

இ) மனிதரை மீறிய மேலாம் வலுவை அறிதல்

ஈ) நல்லதும் தீயதும் தீர்மானிக்கப்படும் ஆற்றலை உய்த்துணர்தல்

உ) உடல், உள்ளம் என்பவற்றிலும் மேம்பட்ட "ஆன்மா" பற்றிய நித்தியத்தை முன்மொழிதல்.

உடலும் மனமும் ஒருமைப்படும் பொழுது, அதற்கு அடுத்த கட்டம் யாது என்ற சிந்தனையானது, நடனத்தின் வாயிலாகத் தூண்டப்படும் பொழுது, மேற்கூறிய அறிகை சார்ந்த எண்ணங்கள் மேலோங்குதலைத் தடுக்க முடியாது.

நடனம் ஆடிய பின்னர், நடனம் பற்றிய நினைவுகளும், மனப்பதிவுகளும் மனத்திலே நீடித்து நிற்றலால், மனித இறப்புடன் வாழ்க்கை முடிவடைந்து விடுவதில்லை என்ற கருத்தேற்றத்துக்குப் புராதன நடனங்கள் உதவலாயின.

நடனத்தின் பொழுது உடல், உளம் தழுவிய மனிதனின் இயல்பானது உளம் சமூகம் சார்ந்த மனிதப்பண்பாக மாற்றப்படுகின்றது. உடல், உள வெளிப்பாடுகள் சமூக இசைவாக்கத்தைச் சிறப்படையச் செய்கின்றன. அனைத்துச் சமூக நடத்தைகளும் "கற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைகள்" என்பதை நடனம் புலப்படுத்தும். பின்பற்றுதல், இனங்காணுதல், ஒத்துழைத்தல், முரண்படுதல் என்ற செயற்பாடுகளின் வழியாக சமூக நடத்தைகள் கற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்தச் செயல் முறைகை



## தமிழீழத்தில் புதிய பார்வையும் புதிய விழிப்பும் மலர்கிறது

எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலம் காலமாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தி வருகிறது. எமது மனக்குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாகப் பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை. அதன் வளர்ச்சியும், எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச் சரித்திரம். மண்ணின் விடிவிற்காகவும், பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப் பெண் புலியாக மாறி விட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கிறாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழிசமைத்துக் கொடுத்தது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ளோடு இணைந்தே ஆரம்ப கால நடனங்கள் விருத்திய டைந்தன.

நடனங்களின் உளவியற் பயன், கல்வியின் பயன் பற்றி ஆராயும் பொழுது "ஒழுக்கப் படுத்தல்" என்ற செயல்முறையில் நடனத்தின் பங்களிப்புப் பற்றி விதந்து கூறப்படுகின்றது. நேர் நடத்தைகள், மனோபாவங்கள், மனவெழுச்சி நிலைகள் முதலியவை ஒழுங்குபடுத்தலின் அகக்கூறுகளாக அமைகின்றன. அவற்றை உள்வாங்குவதற்கும், தொடர்புபடுத்துவதற்குமுரிய உளக்கிரகித்தலும், உடலியக்க அசைவும் நடனக்கலையிலே முதன்மைப்படுத்தப் படுகின்றன. உடல் அசைவுகளே ஒழுக்கத்தின் அடிப்படை அலகாகவும் கொள்ளப்படும்.

மனித உடலின் அசைவானது, உடல் அழகின் மேலோங்கலுக்கு அடிப்படையாகின்றது. நடனத்தின் பரிணாம வளர்ச்சியில் குரூரமான உடல் அசைவுகள் தவிர்க்கப்பட்ட, மேம்பாடான நிலை பரத நாட்டியக் கலையிலே துல்லியமாக வெளிப்படுகின்றது.

மிகவும் கூடுதலான காலப்பகுதியை உள்ளடக்கிய பயிற்சியின் விளைவாகக் கற்றுக் கொள்ளப்பட்ட திறன்களின் அடிப்படையாக அழகியற் சுவையை வழங்கல், நடனத்தின் உளவியல் சார்ந்த தொழிற்பாடாகும். நீண்டகாலக் கல்விக்கும், பயிற்சிக்கும் பின்னர் வழங்கப்படும் அழகியலாக்கத்திலே சிக்கனம், சிறக்குமியல்பு, அழகியல் அறிகைத் தெளிவு, சீர்மிகு உட்பொருளமைப்பு முதலியவை மேலோங்கி நிற்கும்.

உணர்வுகளை உடலியக்க வடிவங்களாக்குதல் நடனத்தின் உளவியற் பண்பாடாகின்றது. இவற்றின் வழியாக ஒருவரது உளப்பிரச்சினைகளுக்கும் நடனத்தின் வழியாக இசைவாக்கம் எட்டப்படும். உள நெருக்குவாரங்களைத் தீர்க்கும் உபாயங்களுள் ஒன்றாக நடனம் கருதப் படுகின்றது. பூர்வீக நடனங்களுள் இந்தப் பண்பு மேலோங்கியிருந்தமையைக் காணலாம்.

"அசைவதற்காகக் கற்றுக் கொள்ளல்", "கற்றுக்கொள்வதற்காக அசைதல்" என்ற இரண்டு செயற்பாடுகளும் நடனத்தினூடாக வழங்கப்படுகின்றன. ■■

---

சமத்துவத்தை நோக்கிய பயணமாக பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லா சமூகங்களிலும், எல்லா பண்பாட்டு வடிவங்களிலும் இந்த சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளி விட்டிருக்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

பால் ரீதியான உடற்கூற்று வேறுபாடு என்பது இயற்கையின் திருவிளையாடலாக இன விருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை. உயிர்ப்படைப்பிற்காக சிருஷ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படையில் ஆணையும், பெண்ணையும் வேறுபடுத்தி சமத்துவமற்ற உறவுகளை சமூகம் பின்னிவிட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும், அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும், அவை பெண் மீது பதித்துவிட்ட படிமங்களும், பார்வைகளும் ஆண் பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.

மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும், பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது. இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதித்துவிட முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஓர் உன்னத உதாரணமாகத் திகழ்கிறது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம்கண்டு கௌரவிக்குமாறு பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும் பொழுதுதான். ஆண் பெண் சமத்துவம் சாத்தியமாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் எழுச்சி வைபவத்திற்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**'1993 மார்ச் 8' அனைத்துலக பெண்கள் நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய செய்தி.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆனையிறவு சமர்

உப்புக் கரித்த காற்று வீசும். பட்சிகளின் கீதம் ஒலிக்கும். சலங்கைகள் ஒலிக்க வன்னிக்கு மாட்டுவண்டி பூட்டி மக்கள் பயணம் செய்வார்கள். காற்றைக் கிழித்துக் கொண்டு புகைவண்டி செல்லும். மக்கள் ஆரவாரமாய் மகிழ்ச்சியோடு வன்னிக்கும் மடுவுக்கும் கிளிநொச்சிக்கும் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கும் படையெடுப்பார்கள். இந்த இதமான மண்ணின் ஜீவ உறவின் பாலமாய்த் திகழ்ந்த ஆனையிறவில் முகாமிட்டிருக்கும் கொடிய எதிரியோடு **10.07.91** அதிகாலைப் பொழுதில் தொடங்கி **29.08.91** முன்னிரவு வரை விடுதலைப்புலி வீரர்கள் சமர்புரிந்தார்கள். அந்தச் சமரில் சில காட்சிகள்.



ஆனையிறவு படைத்தளத்தைச் சூழ அமைக்கப்பட்ட பதுங்கு குழிக்குள் நிலையெடுத்திருக்கும் புலிவீரர்கள்.



வீழ்த்தப்பட்ட சுற்றுலா விடுதி முகாமின் காவலரண் ஒன்றில் தளபதிகள் பால்ராஜ், சூசை.



ஆனையிறவுச் சமருக்கு புலிவீரர்கள் செல்லும் காட்சி.



ஆனையிறவு சமருக்கான திட்டமிடல்.

www.tamileelamarchive.com




# அக்கறைப்பூக்கள்

**எரிமலை ஆசிரியர் குழுவினருக்கு வணக்கம்.**

நலம்; நாட்டமும் அதுவே.

தங்கள் எரிமலையை தொடர்ந்து வாசித்து வரும் தமிழ் நெஞ்சங்களில் நானும் ஒருவன். தங்களின் எரிமலை இதழை பாதுகாத்து வரும் பலரில் நானும் ஒருவன். எனக்கு தங்கள் இதழ்கள் காலதாமதமாகி வருவதால், இதழ் பற்றிய கருத்துக்கள் எழுதுவதில் ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்தது. தமிழகத்தில் அனைத்து இதழ் களிலும் தங்கள் செய்தி இருட்டடிப்புச் செய்யப்பட்டு, விடுதலைப் புலிகளைப் பற்றிய தவறான செய்தி தரு வதாலும், நாங்கள் என்றும் போல் ஈழச் செய்தியினை அறிய உங்களின் எரிமலை எப்போது வெடிக்கும் என, தபால் அலுவலகத்தில் தவம் இருப்பவர்கள். ஈழத்தின் மேலும், தளபதி தம்பி பிரபா கரன் மேலும், எத்தகைய ஒடுக்கு முறை வந்தாலும் என்றும் தொடர்ந்து ஆதரிப்போம்.

பிள்ளை பெறும் தாய் பிரசவ வேதனையை தம் பிள்ளை முகம் கண்டதும் மறப்பது போல், எத்தகைய அடக்கு முறையையும் தாங்கும் நாங்கள், எரிமலையைக் கண்டவுடன் மகிழ்கிறோம்.

**குமார்**
**தமிழ்நாடு.**

**அன்புள்ள எரிமலை ஆசிரிய ருக்கு,**

எரிமலை வைகாசி இதழில், நாவண்ணனின் 'கதை - கவிதை - கண்ணீர்' என்ற ஆக்கத்தை வாசித் தேன். மலையகத் தமிழர் படும் கடும் இன்னல்கள் யாவரும் அறிந்ததே. நாவண்ணன் தனது படைப்பில், இவர் களது துயரங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. மலையகத் தமிழர்களது துன்பங்களுக்கு விடிவு - தீர்வு பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றி, புலிக ளது தகவல் பிரச்சார ஏடுகளில் கட்டுரைகள் எதுவும் நான் வாசிக்க வில்லை. மலையக மக்களது கட்டுரை கள் நீங்கலாக மலையக மக்களுக்கு புதியதொரு தலைமை உருவாக வேண்டும், அல்லது இவர்களும் தமி ழீழத்துக்குள் அரவணைத்துக் கொள்ளப்பட வேண்டும். இது போன்று ஏதாவது மாற்றுத் திட்டங் களை புலிகள் வைத்திருந்தால், இது பற்றித் தெளிவாக விபரிக்கும் கட்டு ரையை எரிமலை தாங்கி வருமாகில் நன்றாக இருக்கும்.

**றெஜி டேவிட் ராஜி**
**நோர்வே.**

**அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,**

ஐயா, தங்களின் மாத இதழ் எங்களுக்காக வெளிவருவதை தொடர்ந்து, வாசிக்கும் தமிழர்களில் நானும் ஒருவன். உங்கள் ஆக்கங்கள் வெகு சிறப்பாகவும், சிந்தனைக்குரிய தாகவும் அமைந்திருக்கிறது. அறிஞர் கள், அரசர்கள், புலவர்களை யாரோ சொல்லக்கேட்டு பெருமையடைந்த நாம், இந்த கலியுகத்தில், நம் கண் முன்னால் தன்னுயிரை தற்கொடை யாய்க் கொடுத்து, எமக்காய் தமிழ் உரிமை கேட்டு போராடும் சுதந்திர வீரப் புலிகளையும், மண்ணையும் புகழ்பாடி நினைவுகூரும் உன் போன்றோரின் பணியை கையெடுத் துக் கும்பிடத் தோன்றுகின்றது.

"தமிழைப் பாடாத நாவும், எழு தாத ஏடும் இருந்தெதற்கு?"

வாழ்க தமிழ்!
வளர்க உன் பணி!!
ஓங்குக புலிகள் நாமம்!!!

**அன்புடன் பாண்டியன்**
**பலர்மோ, இத்தாலி.**

**அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,**

எங்களுடைய நாட்டில் ஈழப் போராளிகளைப் பற்றிய தவறான தகவல்க ளும், உண்மையான போராட்டத்தைப் பற்றி திரித்தும், உண்மைக்குப் புறம்பாகவும் பல வேளைக ளில் பேசப்பட்டும், எழுதப் பட்டும் வருகின்றன. இதற்கு அடிப்படையான காரணம், அரசாங்கமும், அதன் அடிவ ருடிக் கைக்கூலிகளும்தான். எங்கள் நாட்டில் வெளிநாட் டுச் செய்திகளைத் திரித்துக் கூறுவதில் அனைத்து தகவல் செய்திச் சாதனங்களும் உண்மைக்குப் புறம்பாக, மேற்கத்தைய செய்தி நிறுவனங்க ளின் திரிபுவாத செய்தியை தந்து, இங்குள்ள தமிழ் மக்களை தனிமைப் படுத்தி விடுகின்றன. இதனால் இங்குள்ள தமிழர்களுக்கு விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்டம் பற்றிய உண்மையான செய்திகள் கிடைப்பதில்லை.

கடந்த இரண்டு மாதங்களாக 'எரி மலை' இதழைப் படித்து வருவத னால்தான், என்போன்றவர்களுக்கு விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்டம் பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

எரிமலை இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், உண்மைச் சம்பவங்கள், தலைவர் அண்ணை பிரபாகரனின் பேட்டிகள் போன்றவை படிப்பவர்களுக்கு உற்சா கத்தைத் தரும் வண்ணம் உள்ளன.

தமிழீழப் போராட்டத்திற்கு 'எரி மலை'யின் பங்கு எவ்வளவு முக்கி யமோ, அதேபோல், எங்களுடைய பங்கும் 'எரிமலை'க்கு உண்டு என்ப தனை அக்கறைப்பூக்கள் பகுதிக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எரிமலையின் பணி தொடர ஆசி ரியர்கட்கும், அவரது குழுவினருக் கும் எனது வாழ்த்துக்கள்.

**மலேசியத் தமிழன்**
**மலேசியா.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நூல் அறிமுகம்




ஒரு கலைக்கூடத்துக்குள் நுழைவதற்கான "வருக" என்ற வரவேற்புடன் தொடங்கும் நூலானது "சமாதானக் கதவுகள் திறக்கின்றன" என்ற தலைவர் பிரபாகரனின் வார்த்தையை உச்சரிக்கவைத்து விரிகின்றது. அதன் உண்மை, செழுமை வியப்புற வைத்துவிடுகிறது. "அவனுடைய காலத்தைப்பற்றிக் கூறும் ஒரு காட்டூன் கலைஞன்" என்ற இந்நூல் மிக நன்றாக அச்சிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலின் காட்டூனிஸ்ட், கொக்குவிலைச் சேர்ந்த திரு செந்தில்குமாரன் ஆவார். இவர் மலேசியாவிலும், இங்கிலாந்திலும் கல்விகற்று, இங்கிலாந்திலேயே கட்டிடக் கலைஞரானார். சிறுவயதிலிருந்தே காட்டூன் வரைவதில் ஆர்வமுள்ளவர். தமிழீழத்தின் உண்மை நிலையினையும், போராட்டத்தின்பாலுள்ள நியாயங்களையும் எடுத்துக் காட்ட வேண்டும் என்ற ஆவேசமுடையவர். வோல்டர் வெற்றிவேலு என்னும் புனைபெயரில் தற்போது காட்டூன் சித்திரங்கள் வரைந்து வருகின்றார்.

'Committee for Ethnic Research and Analysis' என்ற இனங்கள் பற்றிய ஆராய்ச்சியும், பகுப்பும் என்ற அமைப்பினால் இந்நூல்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் வெளியீட்டாளராக ஸ்ரெலா ஸ்மிட் (Estelle Schmid) உள்ளார்.

இந்நூல் கார்த்திகை, 1992ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கான முன்னுரையை வெளியீட்டாளரான ஸ்ரெலா ஸ்மிட் அவர்களே எழுதியுள்ளார்.

"ஐரோப்பாவில் லோ, விக்கி, சிறிலங்காவில் கொலற், இந்தியாவில் ஆர்.கே. லக்ஸ்மன், தமிழ் நாட்டில் மதன், கேரளாவில் சிறீதர் போன்றோரின் வரிசையில் இவரும் எண்ணப்படத்தக்கவராய் உள்ளார்.

தன்னுடைய தனித் தன்மையான திறமையுடன், போராடும் தமிழ் மக்களுடைய அவலங்களைச் சித்தரித்துள்ளார். இவர் போராட்டத்தை அவதானிப்பவராகவும், போராட்டத்தில் பிரக்ஞைபூர்வமாக பங்குபற்றுபவராகவும் உள்ளார்.

இதுவே அவருடைய காட்டூன் சித்திரங்களுக்கும், அவை வெளிப்படுத்தும் கருத்துக்களுக்கும் வலிமை சேர்ப்பதாக உள்ளது. இந்தக் காட்டூனிஸ்ட், தமிழ் மக்களைத் தனது காட்டூன் மூலம் உற்சாகப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும் வருவார் என்பதோடு, சுதந்திரத் தமிழீழத்தில் பெருமை வாய்ந்த காட்டூன் கலைஞராகவும் மிளிர்வார் என நம்புகிறோம்." என வெளியீட்டாளர் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காட்டூன் சித்திர நூல் ஆழமான விடயங்களைச் சொல்லுவதால் வலிமையான ஆயுதமாக இருக்கிறது. போராட்டத்தை வெளிப்படுத்துகிறது. அதற்கு ஆதரவைத் திரட்டுகிறது. போராட்டத்துக்குள் வாழ்ந்து, அதற்குள் இருந்து வருவதால், அதன் உண்மைத் தன்மையும், எழுச்சியும் பிரமிக்கத்தக்கதாக இருக்கின்றது. நகைச்சுவைத் தன்மை அவரின் வரைதல் திறமை மூலம் வெளிப்படுகிறது. பொருத்தமான நிறங்கள் சேர்க்கப்பட்டு, முற்றிலும் வித்தியாசமான புதிய பாணிக்குச் சென்றிருக்கிறார். இதனால் கூடுதலான அர்த்தம் அவரது செழுமை காட்டூன் படங்களுக்குச் சேர்கிறது.

போராட்டம், போராடும் மக்கள், அடக்குமுறை அரசு, அதன் தலைவர், இராணுவம், அதன் கொடுமை, இந்திய அரசின் தலையீடு, அதன் மேலாதிக்கம், தமிழ் மக்கள் மீதான பல்வேறு அடக்குமுறை வடிவங்கள், சர்வதேச சமூகத்தின் ஏனோதானோ என்ற மனோபாவம் என்ற பல்வேறு அம்சங்களை காட்டூன் சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அடக்குமுறையின் பிரதிநிதியாக முன்னாள் ஜனாதிபதி சிறிலங்கா பிரேமதாஸாவின் காட்டூன்களே கூடுதலாக இடம் பெற்றுள்ளதையும் காணலாம்.

இந்நூலினை கீழ் காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**ESTELLE SCHMID**
**44, AINGER ROAD,**
**LONDON NW3 3AT,**
**UNITED KINGDOM.**
**TEL: 071-586 5892**

**JOHN CHRISTOPHER,**
**13, PL. St. GERMAIN DES LONGS PRES**
**92100 BOULOGNE**
**FRANCE**




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# அதன் படிப்பினைகள்




உலக வரைபடத்தில் மீண்டும் எரித்திரியா என்ற நாடு இடம் பெற்றுவிட்டது. சர்வதேச சமூகத்தில் ஓர் அங்கத்துவ நாடாக அமைந்து விட்டது. ஐ.நா. சபையில் 181வது நாடாக இருக்கையைப் பிடித்துக் கொண்டது. எரித்திரியப் போராட்டம் மிக முக்கியமான பரிமாணங்களைக் கொண்டது. உலகின் தென்பகுதியில், வளர்ச்சியடைந்துவரும் மூன்றாம் உலகில், ஆபிரிக்காவில் எரித்திரிய சுதந்திர தேசம் உருவாகியது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகக் கருதப்படுகிறது. ஏற்கனவே நிறுவப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அரசினுள் புதிய அரசொன்று, நாடொன்று உருவாகும் செயலுக்கு இன்னமும் பங்களாதேஷையே உதாரணமாகக் காட்டுவார்கள். கடந்த இரண்டு வருட காலத்தில், முன்னாள் சோவியத் யூனியன், யூகோஸ்லாவிய, செக்கோஸ்லவாக்கியா ஆகியவற்றிலிருந்து 20க்கு மேற்பட்ட புதிய அரசுகள் தோன்றிய போதிலும், அவை ஐரோப்பாவிலேயே இடம்பெற்றன. மேலும், இப்பிரிவினைகள், முரண்பாடுகள் இன்றி, சுமுகமாக இடம்பெற்றதாகவும் கூறமுடியாது. ஆயினும், சர்வதேச சமூகத்தின் இரட்டை அளவுகோல் பிரயோகத்தின் காரணமாக, ஐரோப்பாவில் இடம்பெற்ற பிரிவினைகள் ஆயுத முரண்பாடாக, உள்நாட்டுப் போராக, சுதந்திரப் போராக நீண்டு போகாமல் தடுக்கும் முயற்சியுடன் கையாளப்பட்டன. பிரிவினையும், சுதந்திரமும் தடுக்கப்பட முடியாது என்ற நிலையில், சுதந்திரத்திற்கான அங்கிகாரமே போர் வெடிப்பதைத் தடுக்கும் என்ற யதார்த்த நோக்கில் கவனிக்கப்பட்டன. இவ்விடயத்தில் முன்னர் யூகோஸ்லாவியாவில் உருவான பொஸ்னியா கெஸிகோவினாவை வேறொரு தளத்தில் வைத்தே ஆராய வேண்டும். இங்கு ஐரோப்பிய கிறிஸ்த்தவ கலாச்சாரத்தின் மத்தியில் முஸ்லீம் நாடு ஒன்று உருவாகுதல் என்ற பிரச்சினை உண்டென்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் தடுப்பதற்காக ஐரோப்பிய அளவுகோலின் பிரகாரம் யுத்த நீடிப்பு தேவையாக இருந்திருக்கலாம். ஆயினும் 3ம் உலகப் போராட்டங்களைப் பொறுத்தவரை, போரை வளர விடுவதன் மூலம் பிரிவினையைத் தடுப்பதே அளவுகோலாக உள்ளது. போரினால் ஏற்படும் உயிர் அழிவும், சமூக, பொருளாதார, கலாச்சாரச் சீரழிவும் பிரிவினையை நிறுத்தும் என கபடமாகக் கணிக்கப்படுகிறது. இக்கணிப்பைப் பிழையாக்கிக் கொண்டு, போரின் அழுத்தங்களைத் தாங்கிக் கொண்டு, போரில் வென்று, சுதந்திர நாட்டினை நிலைநாட்டுதல் என்பது எதிர்நீச்சல் சாதனையாகிறது. இத்தகையதோர் உதாரணமாகத்தான் பங்களாதேஷை படம் பிடித்துக் காட்டுகிறார்கள். ஆயினும் பங்களாதேஷ் போராட்ட வெற்றியில், இந்தியா பெரும்பான்மையான பங்கை வகித்தது. ஆனால், எரித்திரியப் போராட்டத்திலே, வல்லரசுகளின் தலையீடுகளும், உதவிகளும் போரின் வெற்றியை நிர்ணயிக்க உதவவில்லை. பனிப்போர்க் காலத்தில் சோவியத்யூனியன், அமெரிக்கா

**வளவன்**

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஆகியவை மாறி மாறி உதவியமை போராட்டத்துக்கு ஓரளவு உதவியையும், பெருமளவு உபத்திரவத்தையும் கொடுத்துள்ளது. ஏனெனில், எரித்திரியாவும் அதனை அடிமை கொண்ட எத்தியோப்பியாவும் அமெரிக்காவினதும், சோவியத் யூனியனதும் போரைத் தமக்குள் (Proxy war) இட்டுள்ளன. எனவே, எரித்திரிய மக்கள் தங்கள் சுயமுயற்சியின் மூலம், எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் தமது சுதந்திரத்தை வென்றெடுத்தார்கள் என்பதே எரித்திரியப் போராட்டத்தில் உள்ள விஷேசமாகும்.

ஆபிரிக்காவில் நடைபெற்றதும் இன்னொரு முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. ஆபிரிக்கா ஆயிரக்கணக்கான இனமரபுக் குடிகளை (Tribals) கொண்ட கண்டமாகும். ஒவ்வொரு ஆபிரிக்க நாடும், இத்தகு ஏராளமான இனமரபுக் குடிகளையும், பல்வேறு மொழிகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. எனவே, ஆபிரிக்க நாடுகளோ அல்லது ஆபிரிக்க ஒற்றுமைக்கான அமைப்போ (OAU), நாடுகள் பல சிறு நாடுகளாக பிளவுபடுவதை விரும்புவதில்லை. இப்பிரிவினை ஆபிரிக்காவினைப் பலவீனப்படுத்தும் என நம்புகின்றன. இக்கருத்துச் சூழலிலேயே எரித்திரிய சுதந்திரம் நிறைவேறியுள்ளது.

மேலும், எரித்திரியாவை, எத்தியோப்பிய அரசினுள் அடக்கும் முயற்சி, ஐரோப்பிய குடியேற்றவாத அரசுகளால் மட்டுமன்றி, ஐ.நா.சபையின் ஊடாகவும் நடத்தப்பட்டது.



எரித்திரிய விடுதலையை கொண்டாடும் எரித்திரிய மக்கள்

1889ல் இத்தாலியக் குடியேற்றவாதம் எரித்திரியாவைக் கைப்பற்றிய பின்னர், 1936ல் எத்தியோப்பியாவைக் கைப்பற்றி இரண்டையும் இணைத்து வைத்தது. பின்னர், 1941இல் இரண்டாம் உலகப்போரில் இத்தாலி தோல்வியடைந்த பின்னர், பிரிட்டிசாரின் இராணுவ ஆட்சியின் கீழ் இணைக்கப்பட்ட எத்தியோப்பியா வந்தது. அப்போது பழைய எத்தியோப்பிய மன்னன் கெய்லி செலாசியை மீண்டும் அழைத்து, எத்தியோப்பியா முழுமைக்கும் பிரிட்டிஷ் குடியேற்றவாதம் அரசனாக்கியது. இதன் மூலம் மன்னன் கெய்லி செலாசியின் ஆட்சியின் கீழ் தொடர்ந்து எரித்திரியா இருக்க வேண்டியதாயிற்று. எத்தியோப்பியாவின் கீழான இருப்பை உறுதி செய்வது போல், அமெரிக்காவின் முன்னெடுப்பின் பேரில், 1950ல் ஐ.நா.சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. எத்தியோப்பிய அரசினுள் எரித்திரியா ஒரு சமஷ்டி மானிலமாக இருக்குமாறு அத்தீர்மானம் பணித்தது. எனவே, சர்வதேச சமூகம் எரித்திரிய சுதந்திரத்தை மறுதலித்து சமஷ்டி இணைப்பில் தீர்வுகாண முயற்சித்தமையைக் காணலாம். இத்தகு சர்வதேச சட்ட வரையறைகளை உடைத்துக் கொண்டே எரித்திரிய விடுதலை சாத்தியமாக்கப்பட்டுள்ளதும் இங்கு கவனிக்கத்தக்கது. சர்வதேச சட்ட வரையறையானது, தளச் சூழ்நிலை உருவாகாமல், ஒரு பிரிவினைக்கு அங்கீகாரம் அளிக்கும் நிலைமையைக் கொண்டிருத்தலாகாது எனக் கூறுகிறது. எனவே, தளச் சூழ்நிலையை உருவாக்குதல், போராடும் அம்மக்களின் கடமையாகிறது. ஆயுதப்போராட்டத்தின் மூலமோ, ஏனைய வழிகள் மூலமோ சுயநிர்ணய உரிமையை வெளிப்படுத்தல் என்ற ஜனநாயக வழி மூலமோ தளச்சூழ்நிலையை உருவாக்கலாம். அதுவரை, சர்வதேச சமூகமானது அங்கீகரிக்க மாட்டாது என்பது மாத்திரமல்ல, எதிராகவும் செயற்படலாம் என்பதனையே 1950ம் ஆண்டு ஐ.நா.சபைத் தீர்மானம் எடுத்துக் காட்டுகின்றது. எனவேதான், “ஒரு மக்களின் சுதந்திரமானது, அம்மண்ணில், அம்மக்களால் தீர்மானிக்கப்படுகிறதே ஒழிய சர்வதேச அரங்குகளில் அல்ல.” என்று ஓர் அறிஞர் கூறினார்.

எரிதிரியப் போராட்டத்தில் இன்னொரு அம்சம், எத்தியோப்பியாவினுள்ளே எழுந்த முரண்பாட்டைப் பயன்படுத்தியமையாகும். எத்தியோப்பிய விடுதலை இயக்கங்கள், எத்தியோப்பிய அரசுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தி, அத

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

னைக் கவிழ்க்கும் சந்தர்ப்பத்தை, எரித்திரியா தனது பகுதிகளை விடுவிக்கும் இராணுவச் சாதகச் சூழ்நிலையாகப் பயன்படுத்தியமை குறிப்பிடத் தக்கது.

மேலும், அரசியல், ராஜதந்திர ரீதியில், எத்தியோப்பிய விடுதலை இயக்கங்கள் புரட்சிகரமான, முற்போக்கானவையாக இருந்ததோடு, எரித்திரிய மக்கள் விடுதலை இயக்கத்துடன் கூட்டும், நட்பும் உடையனவாக இருந்தமையால், எரித்திய விடுதலையை அங்கிகரிப்பதில் எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. திக்ரியன் மக்கள் விடுதலை முன்னணி என்ற பிரதான எத்தியோப்பிய இயக்கமும், அனைத்தினதும் கூட்டான எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணியும் எத்தியோப்பிய ஜனாதிபதி கெய்லி மரியம் மன்ஜெஸ்ருவை தூக்கியெறிய, 1991, மே 24ல், எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி தலைநகர் அஸ்மாராவைக் கைப்பற்றியதுடன், எரித்தியா முழுமையையும் விடுதலை செய்தது. எத்தியோப்பிய புரட்சிகர இயக்கங்களுடனான கூட்டு, எரித்திரிய விடுதலையை எளிதாக்கியது. எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி, எரித்திய மக்களின் சுயநிர்ணய உரிமையைத் தமது அரசியல் சாசனத்தில் சேர்த்துக் கொண்டது. எரித்திரியாவில் நடைபெறவிருந்த குடியொப்பத்தின் தீர்ப்பினை ஏற்கவும் இணங்கியது. மேலும், முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சர்வதேச நடைமுறைகளையும் எரித்திரியப் போராட்டம் கவனத்தில் எடுத்துச் செயல்பட்டுள்ளது. லண்டனில் அமெரிக்கா ஆதரவுடன் நடைபெற்ற சமாதான மாநாட்டை இங்கு குறிப்பிடலாம். இச்சமாதான மாநாட்டில், எரித்திரியா குடியொப்பம் ஒன்றினை வைத்து, சுதந்திர நாட்டிற்கு ஆதரவாக மக்கள் அபிப்பிராயத்தை அறிய வேண்டும் என ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஒப்பந்த அடிப்படையில், ஐ.நா.சபை குடியொப்பத்தை கண்காணிப்பது தொடர்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதோடு, சமிர் சன்பார் என்ற விசேட பிரதிநிதியின் தலைமையில், 120 சர்வதேச அவதானிகளையும் அனுப்பிவைத்தது. மேலும், பல நாடுகள், ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பு, அணிசேரா நாடுகள் இயக்கம், அரபு லீக் போன்ற அமைப்புகள் ஆகியவற்றின் அவதானிகளுமாக 500 அவதானிகள் குடியொப்பத்தைக் காண்காணிக்க வந்தனர். குடியொப்பம், எரித்திரியா இறைமையுள்ள சுதந்திரமான தேசமாகும் தேவையுண்டா? என்ற கேள்வியுடன் அமைந்தது. இவ்வருடம் சித்திரை மாதம் இடம்பெற்ற குடியொப்பத்தில் 99.81% மான மக்கள் ஆதரவாக வாக்களித்து, தமது சுதந்திர விருப்பத்தை (Free Will) வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, மே. 24ல் எரித்திரிய சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது. 1991ல் அஸ்மாராவுக்குள், எரித்திரியப் படைகள் நுழைந்த தினத்திலேயே, 1993ல் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, சூடான, எத்தியோப்பியா எனப் பல நாடுகள் அங்கீகாரம் அளித்ததைத் தொடர்ந்து, ஐ.நா.சபையில் அங்கத்துவ நாடாகியது. எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், இசையாஸ் அவிவோர்க்கி (Issaias Afiverki) யின் தலைமையில் உருவான எரித்திரிய விடுதலை தமிழீழப் போராட்டத்தோடு மிக ஒத்ததாகவும், நிறைந்த பாடங்களைப் படிப்பிப்பதாகவும் உள்ளது. ■□■

# ஒரு கதை

கிஷ்வர் நஹீத்
(Kishwar Naheed)

ஒரு ஆடுகுதிரையின் மீது
ஒரு குழந்தை ஆடுகிறது
அது மரக்குதிரை.
குழந்தையின் ஸ்பரிசம் அறியாதது.
குழந்தை குதிரையை அடிக்கிறான்
தனது திறமையைக் கண்டு
தன்னையே மெச்சிக் கொள்கிறான்.
அவன் வளர்ந்து பெரியவனாகிறான்.
மரக்குதிரையில் மீண்டும் சவாரி
செய்கிறான்.
ஒரு சடங்கின் மூலம்
தன் இளமையை அறிவிக்கிறான்.
இரவு கழிந்ததும்
குதிரை உருமாறுகிறது.
குதிரையை அடிப்பவன்
தன்னைத்தானே மெச்சிக் கொள்கிற
வன்
மாறாமலேயே இருக்கிறான்;
எஜமானனாக
சவாரி செய்பவனாக
கணவனாக.

நன்றி: மண்ணும் சொல்லும்
(மூன்றாம் உலகக் கவிதைகள்)

1940 இல் பிறந்த கிஷ்வர் நஹீத் பாகிஸ்தானின் மிக முக்கிய கவிஞருள் ஒருவர். அரசாங்கப் பதவியில் உள்ள இவர், வானொலியில் அறிவிப்பாளராக பணியாற்றுகிறார். பல சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக இருக்கும் இவர் கவிதைத் தொகுப்புகள் உட்படப் பல நூல்களை இயற்றியுள்ளார்; பெண்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகிறார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# இவள் வித்தியாசமானவள்

ஆர்த்தி

'இன்றைக்கு என்னை அக்கா வரச்சொன்னவ. எனக்குத் தந்த வேலையை முடிக்காமல் எப்பிடி அவவுக்கு முன்னால போறது. இன்றைக்கு எப்பிடியும் இந்த வேலையை முடிச்சிட்டுத்தான் அவவின்டை முகத்திலை முழிக்கிறது...'

இப்படிச் சொன்ன, சொன்னதைச் செய்து காட்டிக் கொண்டிருந்த விழிதான், அந்த வேலை நேரத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் இன்று நிரந்தரமாக விழி மூடிக் கிடக்கிறாள்.

விழி மரணித்து விட்டாள் என்பதைக் கேட்ட நவபுரம் கிராமத்தில்தான் எத்தனை சோகம்? தம்முடைய உடன் பிறந்தவளையே இழந்தது போல் கதறித் துடித்தனர். எல்லோரும். 'நீ இரவு கூட நித்திரை கொள்ளவில்லையே' என்று தலையிலடித்துப் புலம்பி அழுதார் ஒரு தாய்.

உண்மைதான். விழியிடம் ஒரு வேலையைக் கொடுத்து விட்டால், அவள் தன் பசி, தாகம், உறக்கம் அனைத்தையும் மறந்து பம்பரமாக வேலை செய்பவள். தன்னுடைய வேலையில் அதீத கவனமும், விசுவாசமும் உடையவள்.

இவள் எமது அமைப்பின் முழுநேர உறுப்பினராக இணைந்து கொள்வதற்காக எனது பாசறைக்கு வந்த அன்றைய பொழுதை நினைத்துப் பார்க்கிறேன். புதிய உறுப்பினராக வந்தவள் என்றதும் இவளிடம் எமது போராளிகள் படுகின்ற துன்ப துயரங்கள், கஷ்டங்களை விளக்கினேன். பந்த பாசங்களை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கூறினேன். காயமுறும் வேளையில் மருத்துவ வசதி இல்லாமலே பல மணி நேரம் இருக்க வேண்டி வரும் என்ற போதும், மெல்லிய புன்னகை உதட்டிலே ஓடக் கேட்டுக் கொண்டிருந்தவள்.... 'இவற்றை ஆழமாக யோசித்துத்தான் நீர் இயக்கத்தில் இணைய வேண்டும்' என்று நான் முடிப்பதற்கு இடையில் "என்னால் முடியும்" என அழுத்தமான குரலில் இடைவெட்டினாள்.

அவளுடைய பெயர், விபரங்களை எடுக்கும் போது "நான்....நிமலேஸ்" என்றாள். அந்தத் தொனி எத்தனையோ தொக்கி நிற்க, ஆச்சரியமாக நிமிர்ந்து பார்த்தேன். "ஏழாலை நிமலேஸ்வரியா நீர்?" எனது சந்தேகம் கேள்வியாகின்றது.

1984 - 1985 ஆண்டு காலப்பகுதியிலே விடுதலைப் புலிகள் அமைப்பினால் ஏழாலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் பொறுப்பாளராக இருந்தவள். காலப் போக்கில் இவளின் விடாமுயற்சியினால் அந்நிலைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகமாகியது. விமானக் குண்டு வீச்சு விமானங்களுக்கும், எறிகணை வீச்சுக்களுக்கும் இடையில் புகுந்து சென்று காவலரணில் எமது போராளிகளின் காயங்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பவள். எந்த நேரத்திலும், எந்தக் கட்டத்திலும் எமது போராளிகளுக்கு உணவு கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறையாகச் செயற்பட்டவள்.

இறுதியில் 1987இல் இராணுவப் பயிற்சி பெறுவதற்காகப் பாசறை வந்தாள். அவ்வேளையில் புதிதாக பயிற்சிக்கென வந்த 75 பேருக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள். அக்காலகட்டத்திலும், தனது பாசறையில் இருந்து போராளிகளின் நிலைகளுக்கு உணவு சமைத்து வழங்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாள்.

1987ல் தமிழீழப் பகுதியில் இந்திய ஆக்கிரமிப்பின் போது பயிற்சி பெறமுடியாத சூழ்நிலையில் வீடு திரும்பியவள், தனது உயிராபத்தையும் கூடப் பொருட்படுத்தாது, தலைமறைவாக இருந்து கரந்தடி யுத்தத்தை நிகழ்த்திய எமது போராளிகளுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்தாள். இன்று இவள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மீண்டும் பயிற்சிக்கெனப் பாசறை தேடி வந்துள்ளாள்.

இவளின் உற்சாகமான வேலைத்திறன் பற்றி முன்னரே கேள்விப்பட்டிருந்தும் இன்று தான் நேரில் பார்க்கிறேன். 'விழி' என்ற பெயர் வைக்கப் பட்டதும் 'நல்ல தமிழ்ப் பெயர்' என்று கூறி அன்று முழுவதுமே தனக்குள் அந்தப் பெயரை அடிக்கடி சொல்லிப் பார்த்தாள். எங்கள் எல்லோருக்குமே இது சிரிப்பாக இருந்தது. ஏனோ அந்தப் பெயர் அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

கைதடியில் முன்னர் 'எருதிடல்' என்றும், பின்னர் 'நவபுரம்' என்றும் பெயர் மாற்றம் பெற்ற ஒரு கிராமம். இக்கிராமத்தின் பெயர்தான் மாறியதே தவிர, இங்கிருந்த மக்களின் வாழ்நிலையும், கஷ்டங்களும் மாறவில்லை. இங்குதான் இவள் கிராம வேலை செய்வதற்காக நியமிக்கப்படுகின்றாள்.

நடக்கவே முடியாமல் கற்பாறையாக இருந்த அந்தக் கிராமத்து வீதியைச் செப்பனிட்டு, தார் ஊற்றிச் சிறந்த போக்குவரத்துப் பாதையாக்கினாள். ஆரம்ப சுகாதார நிலையம், தையற் பயிற்சி நிலையம், பாலர் பாடசாலை என்பனவற்றை உருவாக்கினாள். முதலுதவிப் பயிற்சி நெறியை நடத்தி முடித்தாள். பன்ன வேலைப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தாள். மாதர் சங்கத்தினை ஒழுங்கமைத்தாள். சில நோய்கள் ஏற்படும் போது மூட நம்பிக்கைக்கு ஆட்படாமல் எவ்வாறு சிகிச்சையளிக்க வேண்டும் என்பதை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகச் சுகாதார அதிகாரிகளின் துணையுடன் பல சுகாதாரக் கருத்தரங்குகளை நடாத்தினாள். கோழிப்பண்ணைக்கு அத்திவாரமிட்டாள். சிறுவர் பூங்கா, சிறுவர் நூலகம் என்பவற்றை அமைத்துக் கொண்டிருக்கும் வேலையின் போதுதான் வாகன விபத்தில் சாவினைத் தழுவிக் கொண்டாள்.

# அச்சமூட்டும் அளவில் மீண்டும் மலேரியா பரவுகிறது!

*** பாலகுமாரன் ***

தமிழ் ஈழத்தில் மட்டுமல்ல உலகெங்கும் மலேரியா மீண்டும் வேகமாக பரவி வருகின்றது. இங்கு அரசின் அடக்குமுறை காரணம். வேறிடங்களில் உலகத்தின் அக்கறையின்மை காரணம். 1955ம் ஆண்டளவில் ஐந்தாண்டு மலேரியா ஒழிப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்திய உலக சுகாதார ஸ்தாபனம் (WHO)உலகத்திலிருந்து மலேரியாவை ஒழித்துக்கட்ட முடியும் என்றது. ஆனால் இன்றோ, மீண்டும் மலேரியா அச்சமூட்டும் அளவிற்குப் பரவுகின்றது. எல்லாத் தடைகளையும் மீறி உயிர் கொல்லி மலேரியா கிருமிகளை அனோபிலிஸ் (Anopheles gamiae) அனாயாசமாக காவிச் சென்று பரப்புகின்றது. வருடாந்தம் 20 இலட்சம் பேர் மாளுகின்றனர். (எயிட்ஸ் தாக்கி மாளுவோரை விட மிக அதிகமாக) மொத்தம் 27 கோடி மக்கள் வருடாந்தம் பாதிப்படைய, ஆபிரிக்காவில் மட்டும் வருடாந்தம் 9 1/2 கோடி மக்கள் தாக்கப்படுகின்றனர். தெற்கு, தென்கிழக்காசியா, தென்னாபிரிக்கா ஏனைய பாதிக்கப்பட்ட பகுதிகள். இப்போது 1950ல் இருந்ததை விட நிலை மோசமாக உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கவலைப்படுகின்றது.

இதற்குப் பிரதான காரணம் மலேரியா நோய் தடை மருந்துகள் தமது வீரியத்தை இழந்தவண்ணம் இருப்பதும், இத்தடை மருந்துகள் எதிர்க்கும் ஆற்றலை அனோபிலிஸ் பெறுவதும், புதிய ஆய்வுகள் இத்துறையில் மேற்கொள்ளப்படாததும் தான். ஏனென்றால் மலேரியா இன்று நேற்று வந்ததல்ல. மிகப் புராதனமான நோய். 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தென்கிழக்காசியாவிலே முதலில் தோன்றிய நோய். கோமோ இரெக்டஸ் (HOMO ERECTUS) எனப்படும் வளர்நிலை மனிதனையே தாக்கிய நோய். பின்னர் ஆபிரிக்கா, ஐரோப்பா எனப்பரவி கொலம்பஸின் கடற் பயணங்களால் தென்னாபிரிக்க நாடுகளிலும் கால் வைத்த நோய். 19ம் நூற்றாண்டு வரை இருந்த மலேரியா நோய்க் கிருமிகளும், அவற்றிற்கும் நுளம்புகட்கும் உள்ள தொடர்பும் 1880ம் ஆண்டளவில் பிரெஞ்சு வைத்தியரான சார்ல்ஸ் ஸ்பெரன் என்பவரின் ஆய்வின் பின்னரே காணப்பட்டன. இற்றைவரை நான்குவகை மலேரியா நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பொதுவாக உள்ளது பிளாஸ்மோடியம் வைவக்ஸ் (PLOSMODIUM VIVAX) மிகக் கொடியதாக கருதப்படுவது, பிளாஸ்மோடியம் பல்சி பரம் (PLOSMODIUM FALCI PARUM) மெல்லிய நூல் வடிவிலே உடம்பில் உட்புகுவது. இக்கிருமி பல்கிப்பெருகி செங்குருதிக் கலங்களை சிதறப்பண்ணி பெரும் நாசத்தை விளைவிக்கிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இதனைவிடப் பல புதிய வேலைத்திட்டங்களை உருவாக்கி இம்மக்களுக்கு வேலைவாய்ப்பும் கொடுக்க வேண்டும்; விளையாட்டுக் கழகமொன்றை நல்ல நிலையில் உருவாக்கி தேசிய மட்டத்தில் விளையாடக்கூடய தகுதிக்கு இம்மக்களை வளர்க்க வேண்டும்; கல்வி வளர்ச்சிக் கழகம், முதியோர் கல்வி நிலையம் ஆகியவற்றை உருவாக்கி எல்லோருமே கல்வியைப் பெறும் வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற வெறியோடு செயற்பட்டவள் இன்று எம்மோடு இல்லை.

மொத்தத்தில் விழி.... அக்கிராம மக்களோடு இரண்டறக் கலந்திருந்தாள். நவபுரம் என்ற பெயருடன் பின்தங்கியுள்ள இக்கிராமம் 'மாலதிபுரம்' என்ற எழுச்சிக் கிராமமாகப் பரிணமிக்க வேண்டும் என்றும் இங்குள்ள மக்கள் ஏனைய மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்றும் கனவு கண்டவள் இவள்.

பல தடவைகள்... எதையோ கேட்க நினைத்தும், கேட்காமலே இருக்கின்ற இவளது தோற்றத்தைக் கண்டு 'என்ன விழி?' என்ற போது இவள் கூறிய பதில் இன்றும் என் காதுகளில் ஒலிக்கின்றது.

"பயிற்சிக்கு எப்ப போறது என்று கேட்க நினைத்தன் அக்கா. இந்த மக்களுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டி, அவர்களை முன்னேற்றிவிட்டுத் தான் பயிற்சிக்குப் போகவேணும் என்று விளங்குது. ஆனா.... பயிற்சி எடுத்துச் சில இராணுவத்தினரை என்றாலும் அழித்துவிட்டுத்தான் நான் சாகவேணும்."

விழி தன்னுடைய இந்தக் கனவும் கூட நிறைவேறுவதற்கு முன் சாவைச் சந்தித்துக் கொண்டாள். ஆனால், இவள் எமது மனதில் மட்டுமல்ல, தான் வேலை செய்த பிரதேச மக்கள் மனதிலும் நிரந்தரமாக நிறைந்து போனவள்.

இவளின் ஏக்கங்களை, ஆசைகளை எம்முள் வாங்கிக் கனத்த இதயத்தோடு, தொடர்ந்தும் போராட்டப் பாதையில் எமது கால்களை நாம் அழுத்தப் பதிக்கிறோம்.

மலேரியா நோய்க்கு குணமாக்கி மருந்தான 'குவினைன்' முதலில் தென்னாபிரிக்காவிற்கு மதம் பரப்பச் சென்ற ஐரோப்பிய மிசனரிமாரால் சிங்கோணா மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்டது. பின்னர் அமெரிக்க இராணுவத்துறை தனது போர்வீரர் தேவை கருதி குளோரோக்குயின் (Cholorguine) எனப்படும் மலிவான நீண்டகாலப் பயன்பாடுடைய மருந்தினைக் கண்டறிந்தது. இதைவிட இன்று (Mefloguine,Halofantrine Fansidan) எனப்படும் மருந்துகளும் கண்டறியப்பட்டுள்ளன.

இன்றுள்ள சிக்கல் என்னவெனில், குவினைன் மருந்து ஏறத்தாழ தனது செயல் வலிமையை இழந்துவிட்டது. ஏனையனவும் படிப்படியாக தமது வலிமையை இழந்துவருகின்றன. மேலும், 1950ம் ஆண்டளவிலிருந்து பெருமளவு DDT கிருமிநாசினியே நுளம்புகளை அழிக்க பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. சேற்று நிலங்கள், குட்டைகள், நீர்த்தேக்கங்கள், வதிவிடங்கள் எங்கும் இதைத் தெளிப்பதன் மூலம் பெரும் பலன் கிட்டிற்று. ஆனால் இதன் பக்க விளைவுகள் மிக தீங்கானவை. இயற்கைச் சமநிலை பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், நல்லன செய்யும் உயிரினங்கள் பல அழிவதாகவும் பெரும் எதிர்ப்புக் குரல் சூழல் பாதுகாப்பாளர்களால் எழுப்பப்பட்டதால் DDT பாவனை இப்போது முற்றாக தடைப்பட்டுவிட்டது. அத்தோடு இக்கிருமிநாசினியை எதிர்க்கும் திறனை அனோபிலிஸ் பெற்றுவிட்டது.

எனவே மீண்டும் மூர்க்கத்துடனும் அச்சமூட்டும் வகையிலும் மலேரியா பரவி வருகின்றது. இதனைத் தடுக்க புதிய ஆய்வுகள் மூலம் சீராக்கிய குணமாக்கிகள் காணப்பட வேண்டியது மிகி அவசியமாகின்றது. ஆனால் பாரிய மருந்தக நிறுவனங்கள் தமக்கு இலாபமின்மையைக் கருதி இத்துறையில் புதிய ஆய்வுகளை ஊக்குவிக்காது புறக்கணித்துவிட்டன. ஏனெனில் வர்த்தக நோக்கில் பெருமளவு நிதியை செலவழித்து அதனால் கண்டறியப்படும் மருந்துகளை மூன்றாம் உலக நாடுகளில் உள்ள ஏழைகளுக்கு விற்று சம்பாதிக்க முடியாது என்பது இவர்கள் எண்ணம். மலேரியா நோய்த் தடை மருந்துகள் ஆய்விலே உலகிலே முன்னணியில் திகழ்ந்த அமெரிக்க இராணுவ மருத்துவத்துறையோ தற்போது இத்துறையில் நாட்டத்தை இழந்துவிட்டது. எனவே எக்காலத்திலும் எவரும் பொது நன்மை கருதி மலேரியாவுக்கு மாற்று மருந்து காணமுடியவில்லை என்பது சுசப்பான உண்மையாகும். ஏனென்றால் மூன்றாம் உலக நாடுகளை அடிமைப்படுத்தும் இராணுவத் தேவைக்காக குளோரேக்குவினை அமெரிக்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கு பயன்படுத்தியது. ஆனால் இன்று சாம்ராஜ்யங்களும் இல்லை, குடியேற்ற நாடுகளுமில்லை. எனவே மலேரியாவுக்கு புதிய மருந்துகள் காண மேற்குலகுக்கு மனிதநேய அடிப்படையில் அக்கறையுமில்லை. (எனினும் உலக சுகாதார ஸ்தாபனமும், இரசாயனவியல் ஆய்வாளர்களும் சில தனி ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்) இதன் விளைவு தற்போதைய நிலையில் ஏறத்தாழ 210 கோடி மக்கள், அதாவது உலக மக்கள் தொகையில் 40% ஆனோர் மலேரியா நோயால் தாக்கப்படக்கூடிய ஆபத்திலிருக்கிறார்கள் என்பதே.

www.tamileelamarchive.com

# நகரின் மத்தியில் நடந்த கொடூரம் தமிழர் கலைப் பொக்கிசம் தீக்கிரை



சிதைக்கப்பட்ட தமிழர் அறிவுக்களஞ்சியமான யாழ். நூல்நிலையம்.

நான்கு புறமும் இருக்கும் விசாலமான தார் வீதிகளில் வாகனங்கள் விரைந்து செல்லும்.

சுப்பிரமணியம் பூங்காவும், மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானமும், புல்லுக் குளமும், கோட்டை முனியப்பர் கோவிலும், துரையப்பா விளையாட்டு அரங்கமும், மாநகராட்சி மன்றக் கட்டிடமும் சூழ்ந்திருக்க, அவற்றினிடையே நடுநாயகமாய்த் திகழ்ந்திருந்த இரண்டு மாடிக் கட்டிடம்.

ஒரு புறத்தே திறந்த வெளிக் கலையரங்கம்; மறுபுறத்தில் டென்னிஸ் மைதானமுமாக வெள்ளைத் தாமரையில் கல்வித்தாய் அமர்ந்து இருப்பாள் வீணை வாசித்தபடி.

அதனைக் கடந்து பார்வையைச் செலுத்தினால், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற பொது நூல்நிலையம் என்ற பெயர் வரவேற்கும்.

வாசலைக் கடந்து உள்ளே நுழைந்தால் தினசரிப் பத்திரிகைகள் இருக்கும் பகுதி ஒரு புறத்திலும், நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி மறுபுறத்திலும், இவற்றிற்கு அப்பால் சிறுவர் பகுதியுமாக தரைத்தளம், காலை ஏழு மணி முதல் மாலை ஏழு மணிவரை சனத்திரள் மொய்த்த வண்ணம் இருக்கும்.

மாடிப்படிகளில் ஏறி மேலே போனால் உடனுதவும் பகுதியும், கேட்போர் கூடமுமென பரந்த பிரதேசம். எங்கும் நிசப்த்தம் குடிகொண்டிருக்கும். ஒரு குண்டூசி விழுவது கூட பேரோசையாய் எதிரொலிக்கக் கூடிய அளவுக்கு அங்கு நிசப்தம் நிலவும். பண்ணைக் கட... லைத் தழுவி வரும் இதமா... தென்றல்காற்று மேனியை... தொட்டுத் தடவிச் சுகமளிக்... புத்தகங்களின் இதழ்களுக்கு... முகம் புதைத்து, அறிவுக் கட... லின் ஆழம் தேடுவதில் முனை... திருப்போரால் கதிரைகள் நிரம்பி வழியும்.

இப்படித்தான் யாழ்ப்பா... ணப் பொது நிலையத்தின் அன்றைய காட்சி இருந்தது நினைவுத்திரையில் மின்னலா... மேலெழுகிறது.

ஆனால், இந்தக் காட்சிகள் பழங்கதைகளாய்ப் போய் பன்னிரண்டு ஆண்டுகள் அது... குள் பறந்தோடிப் போய்விட்டன.

நகரத்தின் மத்தியில் ஒரு பண்பாட்டுப் படுகொலை.

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**1981 மே 31 இரவு, சிறிலங்கா அரசின் பொலிசாரால் ஆளும் கட்சிக்குச் சார்பான காடையர்களால், யாழ்ப்பாணப் 'பொது நூல்நிலையம்', 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் உட்பட, நகரின் முக்கிய பகுதிகள் தீக்கிரையாக் கப்பட்டும், வெடிவைத் துத் தகர்க்கப்பட்டது மான சம்பவங்கள் நிகழ்ந்தேறின. பண்பாட் டுப் படுகொலையின் சின்னமான இச்சம்ப வம் பற்றிய நினைவாக..**

**நன்றி: ஈழநாதம்.**

நாகரிக மனிதன் வெட்கித் தலைகுனிய காக்கிச் சட்டைக ளின் கோரத்தாண்டவம்.

1981 மே 31-ன் இரவு விடிந்து, காலைக் கதிரவன் தன் பொற் கிரணங்களைப் பரப்பத் தொடங்கிய போது, சுமார் ஒரு இலட்சம் புத்தகங் களும் எரிந்து போன சாம்ப லைத்தான் காற்று நாலா திசைகளிலும் காவிச் சென்றது.

யாழ்ப்பாண நகரம் மீண்டும் எரிவதாய் வானொலிச் செய்தி கள் முணுமுணுத்து ஓய்ந்தது.

தமிழீழம் கேட்டு 'கூட்டணி' கண்டவர்கள் மாவட்ட அபிவி ருத்திச் சபைகளின் முன்பு மண்டியிட்டு நின்ற வேளை அது.

வீராவேசப் பேச்சுக்களுக்கு மூட்டை கட்டிவைத்த கூட்ட ணிக்காரர்கள் எல்லை போட முன்பு பெருகிவரும் சிங்களக் குடியேற்றம் என்ற வெள்ளத் தைத் தடுக்க அணை போடப் படுவதாய், பதவிகளுக்காக போதனைகள் புரிந்து கொண்டிருந்த காலம் அது.

"அபிவிருத்திதானே முக்கி யம். அதற்காக ஆளும்கட்சியை ஆதரிப்பதில் என்ன தவறு?" என்று ஐ.தே.க.வும், அதன் அடிவருடிகளும் வினா எழுப்பி இருந்த சூழல் அது.

இந்த நிலையில்தான் தமிழீழ மக்கள் எதிர்நோக்கும் பிரதா னமான பிரச்சினை, அவர்க ளது பாதுகாப்பும், அதற்கான உத்தரவாதமும்தான் என்பதை, முகத்தில் அறைந்தது போல் எடுத்துக் காட்டிய நிகழ்ச்சியாக யாழ்ப்பாண நூல்நிலைய எரிப்பு இடம்பெற்றது. யார் இந்த நூல்நிலையத்தை எரித் தார்கள்? காமினி திசாநாயக்கா வும், லலித் அத்துலத்முதலியும், இன்னும் அவர்களது ஆதர வாளர்களும் இந்த நூல்நிலைய எரிப்புக்கு காரணகர்த்தாக்க ளாகவும், உடந்தையாகவும் இருந்தார்கள் என்று பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் ஐ.தே.கட்சியில் இருந்து தூக்கியெறியப்பட்ட பின்னர், அப்போதைய ஜனா திபதி பிரேமதாசா பகிரங்க மாக குற்றஞ் சாட்டினார். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்காக ஐ.தே.க.யின் சார்பில் பிரச்சாரப் பணிக் கென அனுப்பி வைக்கப்பட்ட அமைச்சர் குழாம் அப்போது யாழ்ப்பாணத்தில் முகாமிட்டி ருந்தது எனவும், தேர்தல் கட மைகளுக்கு என்ற போர்வை யில் தென்னிலங்காயிலிருந்து காடையர்கள் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தனர் என வும், பிரேமதாசா தனது குற்றச்சாட்டுக்கான ஆதாரங் களை மேலும் சுட்டிக் காட்டி னார்.

மிரட்டியும், விரட்டியும், உதைத்தும், மிதித்தும், துவைத் தும் தமிழ் மக்களைப் பணிய வைத்துவிடலாம் என கனவு கண்ட சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்தில் நெருப்பு மூட்டியது. ஓங்கி உயர்ந்த தீச்சு வாலைகளைக் கண்டு, தமிழ் மக்கள் துடை நடுங்கிப்போ வார்கள் என கங்கணங் கட்டி னர் அவர்கள். ஆனால், அந்தக் கனவுகளும், திட்டங்க ளும் இந்த மண்ணில் ஜெயித்து விடவில்லை. சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து புயற் பறவைகள் கிளம் பின. அரசின் பாதுகாப்புப் படைகளால் நாசமாக்கப்பட்ட அந்த நூல்நிலையத்தின் இடி பாடுகளும், அத்திவாரமும் கூட போருக்குத் துணையாயிற்று. இடிபாடுகளுக்குள்ளிருந்தும், அத்திவாரக் கற்களோடு உறவு கொண்டும், கோட்டைக்குள் குடியிருந்த கொடியவர்கள் பாசறை நோக்கி எறிகணைகள் பறந்தன. தன்னை நாசமாக் கிய பகைவர்களை, நாசமாக் கிப் பழிவாங்கும் நோக்கில் நூல்நிலையத்தின் ஒவ்வொரு கற்களும் கூட மண்ணின் மைந்தர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிற்று.

எந்தக் கோட்டைக்குள் இருந்து புறப்பட்டு வந்தோரால் நுல்நிலையம் தீக்கிரையாக்கப் பட்டதோ, அவர்கள் இப்போது அங்கில்லை. ஆனால், எரி யுண்ட நூல்நிலையக் கட்டிடத் தின் எஞ்சிய பகுதிகள் இன்னும் இங்கே, எதிர்காலச் சந்ததிகளுக்காய் நினைவுச்சின் னமாய் நிமிர்ந்து நிற்கிறது. ■

**இளையவன்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சென்றமாத இதழில் வெளியாகிருந்த புகைப்படத்திற்கான கவிதைகள்.




# கலைக்கோவிலின் கல்லறைத் தோற்றம்

ஞானதீபம் உச்சியில் தாங்கி
ஞாலம் தெரிந்த ராஜகோபுரம்
ஈழத்தமிழகம் உண்டெனக்காட்டிய
ஈடு இணையிலாக் கலங்கரை விளக்கம்
அகிலத் தமிழர் கூடிய போதில்
அறிஞர்கள் பாதம் பதித்த கோயில்
அன்றைய நாட்களின் அவலக்காட்சி
இன்றைய நிலைக்கும் இதுவே சாட்சி.

இம்முடி தொட்ட மேகம் யாவும்
செந்தமிழ் சொல்லிப் போகும் என்று
பௌத்த சக்கரம் பற்றிக் கொண்டதில் ஒரு
கல்விக் களஞ்சியம் கல்லறையாக
புத்தகச் செல்வம் புதைகுழி போனது.

தாயே! ஏனோ தலைவிரிக்கோலம்?
சுதந்திரம் இழந்த சோகம் போலும்
எங்கள் மேடையில் அன்னியர் நாடகம்
நடந்ததைச் சொல்லும் ஞாபகச் சின்னம்.

விழும்புண் மார்பில் ஏந்திய மறவன்
விழா நிற்கும் நிலைத்த கம்பீரம்
தமிழா! திடங்கொள் தமிழா! என்று
உமிழுங் குண்டுகள் மத்தியில் போதனை

தீண்டிய தீயது உன்னைப் பொசுக்க
தூண்டும் எம்முள் புரட்சித் தீயை
துணிதலும், நிமிர்தலும்
தோல்வியைத் தொலைக்கும்
அணி திரண்டிடில் அடிமையை ஒழிக்கும்

எங்கள் மண்ணின் ஒவ்வொரு துகளும்
எங்கள் சொந்தமாய் ஒருநாள் திகளும்
அந்நாள் வரையில் அன்னையே பொறுமை
அதன் பின் எம்மால் உனக்குப் பெருமை.

- ஞானி
ஜேர்மனி.

நாமகள் நர்த்தனம் புரியும்
நன் நாடாம் யாழ் நகரில்

நல்லறிவுக் களஞ்சியமாய்
நமக்கறிவூட்டி நின்ற கலைக்கூடம்
நாசகாரர் சதியதனால்
நற்பொலிவிழந்த காட்சி இதோ...!!!

அறிவுச்சுடர் பரப்பி
ஆக்கங்கள் பல தாங்கி நின்று
அகல் விளக்காய் ஒளி பரப்பி
அகிலமெங்கும் புகழ் பெற்ற எம்
அருங்கலைக் கோயில் இன்று
அருங்கதியற்று நிற்குதையோ

கலைமகளின் கலையமுதக்
கலைதனை நாம் பருகிநின்ற
கலைக்கோயில் கலை வடிவம்
காடையர் கவனத்தை ஈர்த்ததோ....
காதகர் கண் பட்டு வெறித்தனத்தால்
கருகி அனைத்தும் கரைந்ததையோ!!

- திருமதி இ. சிவபாலன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஒளிக்கரம் நீட்டுங்கள்



தாயை இழந்தேன்...
தந்தையை இழந்தேன்...
உற்றார் உறவினரும்
உதவமுடியாத நிலைமையிங்கு.

இந்த வயதில் இப்படியா! என்று...
ஆச்சரியப்படாதீர்கள்.

நான் மட்டுமல்ல... என்னைப்போன்ற
எத்தனையோ இளங்குருத்துக்களின் நிலையும்
இப்படித்தான்.
உங்களுக்கும் புரியாமலில்லை.

இத்தனையும் தாங்கிக்கொண்டு
இப்படியொரு புன்சிரிப்பா?
.... நீங்கள் யோசிக்கலாம்.

ஓம்... அது எங்களுடைய சொத்து!

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

*55, Bond Way,*
*London SW 8 ISJ,*
*ENGLAND.*
*Tel: 81/ 5211313.*

*Zouavenlaan - 99,*
*4731, EP Oudenbosch,*
*Netherlands,*
*Tel: 31 - 165212832.*

*Tal Str - 15,*
*6020 Emmen Bruke,*
*Switzerland.*
*Tel: 41 55 74 69.*

*188, Rue Ordener,*
*75018 Paris,*
*France.*
*Tel: 42 63 24 87.*

*Lettensberg - 47,*
*26897 - Esterwegen,*
*Germany.*
*Tel: 05955-1436.*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கொடி பறக்குது கோட்டையில்!
கொடி பறக்குது கோட்டையில்!
அடிமை என்றதோர் பழி அகன்றது
கொடி பறக்குது கோட்டையில்!

தலை நிமிர்ந்தது தமிழினம்!
தலை நிமிர்ந்தது தமிழினம்!
நிலை குலைந்து நம் பகைவர் ஓடினர்
தலை நிமிர்ந்தது தமிழினம்!

- ஓவியர் ராஜன் -

www.tamileelamarchive.com